REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER.  T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு
தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், கர ஐப்பசி உரு 11-11-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 83) | இதழ் 18

JAFFNA COLLEGE LIBRARY
12 NOV 1951
VADDUKODDAI, CEYLON.

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை, 'பொக்கெற்'கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

இலட்சிய நகரமாக விளங்கிய யாழ்ப்பாணம், இனிக் கழைக் கூத்தாடிகளின் களரியாக மாறிவிடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கின்றது.

# தார்த்தெருவிலே தடம்புரளும் தமிழ்!

## யாழ்ப்பாணம் கழைக்கூத்தாடிகளின் களரியாக மாறிவிடுமா?

சீர்திருத்தம் பெற்ற தனி மனிதன் ஒருவனை மீண்டும் கண்மூடித்தனமாகக் காரியங்களைச் செய்யத் தூண்டுவது அவ்வளவு கஷ்டமான காரியமல்ல. அதே போலச் சட்டதிட்டங்களுக்கு அமைந்து ஒழுகும் ஒரு சமூகத்தையும், கட்டுப்பாடுகளுக்கு அடங்காத மக்களைப் போன்று ஏறுமாறாக நடந்துகொள்ளச் செய்வதிலும் கஷ்டமிராது.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றுவரும் நகரசபைப் பொதுத்தேர்தலைக் கவனிக்கும்போது முற்கூறிய அமுதவாக்கியந்தான் நினைவுக்கு வருகின்றது. இலட்சிய நகரமாக விளங்கிய யாழ்ப்பாணம், இனிக் கழைக் கூத்தாடிகளின் களரியாக மாறி விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கின்றது. இந்த ஏக்கத்தையே சென்றவாரம் இங்கு வெளியான கட்டுரையும் உணர்த்தி வைத்தது. இதனைப் படித்த பலர் யாழ்ப்பாணம் இன்று அல்லோல கல்லோலப்படுவதை நன்கு உணர்ந்துகொண்டதுமன்றி உள்ளதை உள்ளவாறே எழுதியிருப்பதாகவும் பாராட்டுகின்றனர்.

"மக்கள் நடந்து செல்லும் வீதிகளில் அபேட்சகர்களின் பெயர்களும் சுலோகங்களும் மிதிபடுகின்றன" என்று சென்ற வாரக் கட்டுரையில் எழுதியிருந்தேன். இதனை இன்னும் விரிவாக 6-11-51-ல் வெளியான **இந்து சாதனம்** ஆசிரியர் தமது கூற்றாக எழுதியிருப்பதின் ஒரு பகுதியை இங்கு குறிப்பிடுவது மிகப் பொருத்தமானது. அப்பத்திரிகை கூறுவதாவது:

"இப்பொழுது சிலகாலமாக இந்த யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் தமிழ் அக்கரங்கள் விஷயமாகச்செய்யும் ஒரு அக்கிரமம் சகிக்கத்தக்கதல்லவே! என்ன அக்கிரமம்? தமிழிலே ஏதும் விளம்பரஞ் செய்ய வேண்டுமானால், தெரு வீதிகளிலுள்ள வீட்டுச்சுவர்கள், வேறு கட்டடங்களின் சுவர்களிலே பெரிய அக்கரங்களால் எழுதியும், இல்லையேற் பெரிய எழுத்திலே தாள்களில் அச்சிட்டுப் பசையிட்டு ஒட்டியும் வந்தார்கள்; அப்படிச் செய்ததையிட்டு நாம் ஒன்றுஞ் சொல்ல வரவில்லை; ஆனால் இப்பொழுது என்ன செய்கிறார்கள்? இந்நகரில் விரைவில்

**நமது விசேஷ நிருபர்**

கூடவிருக்கும் வட்டார அங்கத்தவர் தேர்தலுக்கு அபேட்சகராக மூற்பட்டுநிற்போர், தங்கள் திருநாமம் முதலிய பெருமைகளையும், தங்களையே தேர்தல் செய்யவேண்டுமென்ற பிரார்த்தனையையும், தார்கொண்டு மெழுகப்பட்ட பெருந் தெருக்களிலும் சந்திகள் சதுக்கங்களிலும் வெள்ளை வர்ணத்தினாலே தீட்டி, இல்லையேல் தீட்டுவித்து விடுகிறார்களே; இத் தெருவீதிகளினூடு போவாருடைய வெறுங்கால், செருப்புக்கால், மிதியடிக்கால், சப்பாத்துக்கால் எல்லாக்கால்களின் கீழுங்கிடந்து இந்தச் செந்தமிழ் – தெய்வத்தமிழ் – அக்கரங்கள் மிதியுண்டு உழக்குப் படுகின்றனவே! தமிழெழுத்தைக் காலால் மிதிக்கக் கூசும் பழைய மனிதர், படித்த மனிதர், இன்னும் பலர் இந்த நகரத்திலிருக்கிறார்களே! இவர்கள் தெருவழியே செல்வது பேரிடராகவிருக்கின்றதே! இந்தத் தமிழ் எழுத்துக்களுக்கு இப்படியான துரோகம் எந்தக் காலத்திலேனும் நடந்ததுண்டா? தமிழன் தன் தாய்மொழியெழுத்துக்களைக் காலால் மிதிக்கும்போது அவனுடைய கால் கூசுமே! தாய்மொழியெழுத்துக்களைத் தாமும் மற்றையெல்லாருங் காலால் உழக்கச் செய்துவிட்டு, வட்டாரப்பிரதிநிதிகளாய் நகரசபையுட் புகுந்து இந்தப் பிரதிநிதிகள் தாய்மொழியின் பொருட்டு ஏதும் விருத்தி செய்வார்களா?

"சென்ற ஆண்டில், இங்குள்ள செந்தமிழபிமானிகள், தென்னிந்திய தமிழ் நாட்டிலுள்ள தனித்தமிழபிமானிகளை இங்கே வரவழைத்துத் தமிழ்ப் பேர்விழாச் செய்தபோது, தமிழ்த்திருமுறைகள் பலவற்றை யானை மீது ஏற்றி வாத்தியம் வரிசைகள் சகித

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)



சென்றவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பிரதம தேசாதிபதி சோல்பெரி பிரபு

# பாலர்கள் கல்விப் பணி

## பிரதம தேசாதிபதி சோல்பெரி மகிழ்ச்சி

**நமது நிருபர் கடிதம்**

யாழ்ப்பாணம், 9-11-51

பிரதம தேசாதிபதி சோல்பெரிப் பிரபு அவர்கள் திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து இங்குள்ள பல கல்வி நிலையங்களையும் பொது ஸ்தாபனங்களையும் தரிசித்தார். உத்தியோக தோரணையிற் பிரதம தேசாதிபதியின் விஜயம் அமையாதவிடத்தும் முக்கியமான சில பொது விஷயங்களில் அவர் ஈடுபட்டுத் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அன்று காலை யாழ்ப்பாணப் புகையிரத நிலையம் சோபையுடன் விளங்கிற்று. தேசாதிபதியை யாழ்ப்பாணத்தில் மந்திரி சிற்றம்பலம் அவர்கள் வரவேற்று மேயர் பொன்னம்பலம் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். யாழ்ப்பாணத்துப் பிரதிநிதிகள் உட்பட வேறும் முக்கிய பிரமுகர்கள் இவ் வரவேற்பு வைபவத்திற் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் கன்னிகாஸ்திரி மடப் பாடசாலையில் முன்மாதிரிப் பாலர் வகுப்பினைத் திறந்து வைத்த பிரதம தேசாதிபதி அவர்கள் தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:

யாழ்ப்பாணத்திலுள்ள குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக்காக ஆற்றப்படும் இப் பணியில் நான் கலந்து கொள்வதையிட்டுப் பெரிதும் மகிழ்கின்றேன். பெற்றார் சங்கங்களை அமைக்கும் விஷயத்தில் ஆசிரியர்கள் முக்கியமான ஒரு பணியை நிறைவேற்றியிருக்கின்றனர். அதே போன்று பாலர் பாடசாலை சம்பந்தமாகவும் இது போன்ற சங்கங்கள் ஏற்படுத்தப் படுமென நம்புகின்றேன். பாலர் பாடசாலைபற்றி இப் பகுதியில் முற்போக்கான கருத்துக்கள் நிலவி வருவதைக் கண்டு மகிழ்கின்றேன்.

இம் முன்மாதிரிப் பாலர் வகுப்பினை ஏற்படுத்துவதிற் பாலர்பகுதிப் பாடசாலைகளின் வித்தியாதரிசினி ஸ்ரீமதி திரேஸ் துரைசிங்கம் அவர்கள் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டார். அன்று அவ்வம்மையார் ஆற்றிய விரிவுரையைப் பிரதம தேசாதிபதி அவர்கள் பெரிதும் பாராட்டியிருந்தார்.

வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரிப்பழைய மாணவர் சங்கம் திங்கட்கிழமை இரவு சோல்பெரிப் பிரபு அவர்களுக்கு அளித்த விருந்து வைபவத்திற் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர். [illegible] யும் சோல்பெரிப் பிரபு அவர்கள் தமது பேச்சிற் குறிப்பிட்டிருந்தார்.

கோப்பாய் அரசினர் பாடசாலையில் வித்தியாபகுதியாரால் ஏற்படுத்தப்பட்ட கைத்தொழிற் பொருட் காட்சியைச் செவ்வாய்க்கிழமை (6-11-51) மாலை சோல்பெரிப்பிரபு அவர்கள் திறந்து வைத்துப் பேசும்போது தேசியக் கலைவளர்ச்சிக்குக் கைத்தொழில் அபிவிருத்தி அத்தியாவசியமென்பதை வற்புறுத்தியிருந்தார்கள்.

### பலாலி அரசினர் கலாசாலை

சோல்பெரிப் பிரபு அவர்கள் பலாலியிலுள்ள அரசினர் ஆசிரிய கலாசாலையைத் தரிசித்தபோது, அன்னாரைக் கல்லூரி அதிப பி. சவரிமுத்து அவர்கள் வரவேற்றார். பிரதம தேசாதிபதி அவர்கள் பேசும்போது கல்லூரி வளர்ச்சியில் ஆசிரியர்களும் மாணவர்களும் மிகுந்த சிரத்தை காட்டி வருவதைக் குறிப்பிட்டது மன்றி அவர்கள் அனைவரின் ஊக்கத்தையும் பாராட்டினார்.

### நடன விருந்து

பிரதம தேசாதிபதி அவர்களின் விஜயத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப்பகுதிக் காரியாதிகாரி டி. டபிள்யூ. செல்வரத்தினம் அவர்களைக் காரியதரிசியாகக் கொண்ட ஒரு நிர்வாகசபை செவ்வாய்க்கிழமை இரவு நகர மண்டபத்தில் நடன நிகழ்ச்சிகளை ஏற்படுத்தியிருந்தது. யாழ்ப்பாணம் நடன கலாசாலையும், ப்றை நடன கலாசாலையும் இதிற் பங்குபற்றின. யாழ்ப்பாண நடன கலாசாலையின் நிகழ்ச்சிகளையும், ஏனைய நிகழ்ச்சிகளையும் பிரபு சோல்பெரி உட்படப் பலரும் பாராட்டினர். யாழ்ப்பாணம் நடன கலாசாலையின் நிர்வாகியான திரு. இராஜநாயகம் இத்துறையிற் சலியாது உழைத்துவருகின்றார்.

சில தமிழ்ப் பாடல்களின் கருத்துக்களை ஆங்கிலத்தில் அச்சிட்டிருந்த 'கார்ணத்தாற் சோல்பெரிப்பிரபு அவர்களுக்கு விஷயத்தை விளங்கிக் கொள்வது இலகுவாயிற்று.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## தனித்து நிற்றல்

### நேருஜி இராஜதந்திரம்

இந்தியவரசினர், ஐ. நா. சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றாராயினும் மேலைத் தேச நாடுகளுடன் பல விஷயங்களிற் சேர்ந்து நிற்கவில்லை. இப்படித் தனித்து நிற்பது இராசதந்திரமாகுமாவெனப் பெரும் விவாதம் நடக்கின்றது. இதற்குப் பிரதமர் நேரு கொடுத்த பதில் ஆணித்தரமானது. இந்தியா எந்த நாட்டுடனாவது பகை சாதிக்க அல்லது எதிர்க்க விரும்பவில்லை, மேலைத்தேச நாடுகள் சொற்படி கைகட்டி நின்று அவைகட்கு அடிமையாகப் போவதில்லை. மேலைத்தேச நாடுகள் ஒன்றுசேர்வதும் பின் பிரிவதும், முரணடைவதுமாகிய கொள்கைகளை இந்தியா முற்றாகப் புறத்தே ஒதுக்குகின்றது. அந்நிய நாடுகளைக் குறித்துத் தகராறுகள் பிரச்சினைகள் காலத்துக்குக் காலம் தோற்றின் அவ்வப்போது அவ்வவ் விஷயங்களை நன்கு ஆராய்ந்து எது அவசியம் செய்யப்படவேண்டுமோ அதை இந்தியா செய்யுமென்றார் பிரதமர் நேரு. அமெரிக்காவுடன், அல்லது ருஷியாவுடன் சேர்ந்து உடன்படிக்கைசெய்து தனது மனட்சாட்சியை இந்தியா விலைக்கு விற்கமாட்டாது. அமெரிக்காவுடன் இந்தியா சேராவிடின் நினைத்தபடி உணவுப் பொருள்களைப் பெறுவதெப்படியெனச் சிலர் கேட்கின்றனர். நடுநீதியையும், நேர்மையையும் நிலைநாட்டப் பட்டினிகிடப்பது குற்றமாகாதென்றார்.

**WANTED**
FOR
**Kokuvil Hindu College**

A **Librarian** to assume duties on 1-12-51. Please apply stating qualifications and enclosing two recent testimonials to The Manager, Kokuvil Hindu College through the Principal. Applications close on 20-11-51.

[4452]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது இயற்கை?

இ. அம்பிகைபாகன்

**நான் பல பூஞ்செடிகளை** நாட்டினேன். சில தளிர்த்து வளர்ந்தன. சில வாடி வதங்கி மண்ணுடன் கலந்துகொண்டன.

வளர்கின்ற செடி ஒன்றைப் பார்த்து, "செடியே! நீயிர் தளிர்த்ததற்கும் மற்றையவை வாடியதற்கும் காரணமென்ன?" என்றேன்.

"அதுதான் இயற்கை" என்று மழலை மொழிந்தது அச்செடி.

எங்கிருந்தோ சுழல்காற்று விழுந்தடித்துக்கொண்டு வந்தது. வானமும் பூமியும் அதிர்ந்திடும்போ லிருந்தது. மறுகணம் வானம் பொழிந்தது. எங்கும் ஒரே வெள்ளம். சில மரங்கள் 'பட பட' வென்று சுழன்று முறிந்தன.

"ஐயோ! நேற்று முளைத்த பச்சைப் பாலன்களான எனது செடிகளின் கதி என்ன?" இவ்வாறு பதைபதைத்தது என் மனம்.

சாளரத்தினூடாக வெளியே இருந்த அப் பயிர்களைப் பார்த்தேன்.

அவை, பயமின்றிப் பதைபதைப்பின்றி வீரப் புதல்வர் போல நிமிர்ந்து நின்றன.

"இதுவும் இயற்கைதானு?" என்றது என் மனம்.

காலை வேளை. பூங்காவிற் புகுந்த என்னை எத்தனையோ மலர் முகங்கள் புன்னகையுடன் வரவேற்றன. காலைக் கதிரவனின் இளங் கதிர்களின் ஸ்பரிசத்தைப் பெற்று, இன்ப மது சுரந்த மலர் மாதர்களைத் தேடி ஓடிவந்துகொண்டிருந்தன எத்தனையோ மணி வண்டுகள். இரவு முழுவதும் பிரிந்து தனித்த அவை, இன்பம் நுகரும் அவாவில் அல்லோல கல்லோலப்பட்டுக்கொண்டிருந்தன. சில வண்டுகள், தமக்கு இன்பமளிக்க உள்ளம் கசிந்து இசைந்த மாதருடன் கூடி எல்லைமீறிய உணர்ச்சியின் தம்மையும் மறந்து இருந்தன!

இதையெல்லாம் பார்த்து ஏங்கி இருந்தன எத்தனையோ மொட்டுக்கள்.

"பறந்து இளைத்த வண்டினமெல்லாம் எம்மைக் கடந்து செல்கின்றன. வேறும் எத்தனையோ செடிகளையும் மொட்டுக்களையும் கடந்து செல்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் அலட்சியஞ் செய்கின்றன. சில சமயங்களில் ஒரே மலருக்கு எத்தனையோ வண்டுகள் போராடுகின்றன! அது ஏன்?" என்று வினவியது ஒரு மொட்டு.

"அதுவும் இயற்கைதான்!" என்றேன நான்.

மாலைநேரம், அவனைத் தேடிக்கொண்டு, அவள் சோலைக்குப் போனுள்.

அவன் அங்கே இல்லை. சுற்று முற்றும் பார்த்தாள்.

பலப்பல மணி வண்டுகள் மலர்கள்மீது தங்குவதும் அப்பால் செல்வதுமாக இருந்தன.

"மலர்மாதே! இது என்ன? வழியே வரும் வண்டினமெல்லாம் உன்னை மணந்து செல்ல உரிமை உண்டா?" என்றுள்.

"பெண் மலரே! எம்மை எத்தனை வண்டுகளும் நாடலாம். எமது அழகைக் கண்டு சுற்றிச் சுற்றி வட்டமிடலாம். அதுகாரணமாக எமது தர்மம் அழிந்துவிடமாட்டாது!" என்றது ஒரு மலர்.

"அப்படியானுல் எது அதர்மம்?" என்றுள் அவள்.

"மாதே! எத்தனை வண்டுகள் எம்மை நாடுகின்றனவோ, அத்தனைக்கும் நாம் இன்பம் அளிப்பதில்லை. எமது உள்ளத்தை அடைந்து, அங்கே இன்ப மதுவை உண்ணும் உரிமையை நாம் கொடுப்பதில்லை! முதன்முதல் எம்மை நாடுகின்ற வண்டு எதுவோ, முதன்முதல் எமது உள்ளத்தை அடையும் வண்டு எதுவோ அதுவேதான் இன்பம் பெறுகிறது! மற்றயவையெல்லாம் எமது உள்ளத்தை அறிந்து தம் வந்த வழியே திரும்புகின்றன!–" என்றது மலர்.

"அப்படியானுல் ஏமாற்றமடைந் தடைந்தும் அவை ஏன் உம்மைத்திரும்பத் திரும்ப நாடுகின்றன?" என்றுள் அவள்.

"அது இயற்கை அன்னையின் திருவிளையாடல்!"— என்று புன்னகை புரிந்தது மலர்.

எங்கிருந்தோ மெல்லிய தென்றல் தவழ்ந்து வந்து மலர் மாதரைத் தழுவிச் சென்றது. அவை நாணத்தினுல் அங்கு மிங்கு மசைந்தன.

அதுகண்டு தலை கவிழ்ந்த அவளும் நாணத்துடன் நகர்ந்தாள்.

குலைதனை இழந்த வாழை, விதவையைப்போலச் சிறு குழந்தைகள் சூழத் தலைவிரிகோலத்துடனும் வெறுங் கழுத்துடனும் வாடி நின்றது.

"இது என்ன கோலம்?" என்றுள் மாது.

"காலத்தின் நியதி" என்றது வாழை.

"இது என்ன தழும்பு?" என்றுள் அவள். குலையிருந்த தழும்பைச் சுட்டிக்காட்டியது அவளது விரல்.

"எனது இளம்பராயத்தில் என் உள்ளத்திலே ஒரு மொட்டு இடம் பெற்றது.

(தொடர்ச்சி 7–ம் பக்கம் பார்க்க)

✻ காங்கேசன் துறையில் ✻

'ஷெல்' பெற்ரேல் நிலையம்

தினம் 24 மணி நேரமும் திறந்துள்ளது

விநியோகிப்பவர்கள் :

நியூ கோ ட்ரேடிங் கம்பெனி

காங்கேசன் துறை

தந்தி விலாசம் : " நியூ கோ ", டெலிபோன் : நம்பர் 25

[4446]

சகல பயிர்களுக்கு

CCC பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில் 40 வருடகால அனுபவத்தின் பயனுக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The Colombo Commercial Company, LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4439]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிப் பிறப்பொடு கத்தரித் தோட்டமும் ஆக்கி அளித்த அதே சோமசுந்தரப் புலவர், 'தென்னிலங்கை வள'ச் செந்தமிழ் மாந்தி இறுமாந்திருந்த நமக்கு 'நாமகள் புகழ்மாலை' யாகிய திறவாத படலையைத் திறந்திருக்கிருர்கள்.

# 'திறவாத படலை'

ஒரு பெரிய மாளிகை. கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. அதன் உட்புறத்தே மாளிகைக்குரிய கனவான் தன்னுடைய நண்பருடன் இன்னும் எப்படி எப்படிப் பணம் சேர்க்கலாம் என்று திட்டமிடுக்கொண்டிருக்கிருர். வெளிப்படலையிலே ஒரு புலவர் — இல்லாமையோடு கூடப்பிறந்தவர்தான். — ஈயாதமையோடு உறவுகொண்ட அந்தச் செல்வரிடம் போவதா அன்றித் திரும்புவதா? என்று யோசிக்கிருர்.

"மானம் ஏகாது பின்தள்ள
ஆற்ருமை முன் தள்ள
இடை ஊசலாடி யாடி"

தள்ளாடும் இந்தப் போரிலே ஆற்ருமைதான் வென்றுவிடுகிறது. இதனுல் முன் எக்காரணங் கொண்டும் அவர் திறவாத படலையைத் திறக்கிருர். அவர் கண்ட காட்சி...... ஆகா! அற்புதம்!!

அங்கிருந்த கனவான் புலவரைக் கண்டதும் எழுந்து இருகரங் கூப்பினுர்; தலையின் மேல் வைத்து அஞ்சலி செய்தார். "கடவுளாளே இப்போதும் தங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம்; தாங்கள் என் குடிலுக்குவந்த காரியம் என்ன?" என்று தெண்டனிட்டுக் கேட்டார்.

புலவருக்கு ஆனந்தம் பொங்கி வழிந்தது.

இப்படிப்பட்ட புண்ணியவானுலேதான் மழையே பெய்கிறது என்று இறும்பூதெய்திஞர்.

ஆசையோடு வந்த காரியத்தை மெல்லமாகச் சொல்லுகிருர். **சிறிது பொருள் உதவி** செய்யவேண்டும் என்பதுதான் அவர் சொல்லத் தொடங்கிய வார்த்தை. "பொருள்" என்ற சொல் புலவர் வாயில் **அடி எடுத்திடுமுன்** கனவானுக்கு நிகழ்ந்ததைப் புலவர் படம் பிடித்துக் காட்டுகிருர்:

"..................
திருமுகம் கருமுகமதாய்
விண்டவாய் கூம்பக்
கழுத்துச் சரிந்தொரிரு
விழிசொருகி நாக்குவீழ்ந்து
விக்குளெழ மரண வேதனை"

உற்ருராம் கனவான். புலவர் அடிஎடுத்ததை நிறுத்தி வீடு நோக்கினுர். இந்நிகழ்ச்சி அவர் மனதை உறுத்தியது. இப்படி இனிமேல் நடவாது என்னைக் காக்க வேண்டும் என்று நாமகளை வேண்டினுர். அருமையான — தெவிட்டாத — கவிதைகள் நமக்குக் கிடைத்தன:

இல்லாமை யால்வந்த
துயரினுல் மிகநொந்து
இரக்கத் துணிந்துமானம்
ஏகாது பின்தள்ள
ஆற்ருமை முன்தள்ள
இடையூசல் ஆடியாடிப்
பல்லா யிரந்தரம்
காட்டியும் நாவிஞல்
பயிலாத மொழிபயின்றும்
பணியாத பேரைப்
பணிந்தும்**முன் திறவாத
படலை**பல பலதிறந்தும்

### யாழ்ப்பாடி

பொல்லாத வஞ்சரைப்
பாடியும் புகல்கின்ற
பொய்ம்மைமொழிசெவிமடுத்தும்
போற்றுமுன் பெருமைபறி
போகவிட் டென்மனம்
புண்பட்ட வாறுபோதும்
செல்லாத செல்வமும்
திருவடிச் சேவையுஞ்
சிறியனுக் கருளுகண்டாய்
தென்பொதிய மலையிலுறை
கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே.
(செந்தமிழ்க்குலதெய்வம் பா. 9)

கண்டெழுந் திருகரங்
கூப்பித் தலைக்குமேல்
காட்டிஅஞ் சலிசெய்குவார்
கடவுளே இப்போது
பேசியதும் உங்களது
கதைஎன்று கண்ணிர்விடுவார்
தெண்டனிடு வார்இங்கு
வந்தகா ரியமேது
தெரிவிக்க வேண்டும்என்பார்
சிறிதுபொருள் உதவியென்
றடியெடுத் திடுமுனந்
திருமுகங் கருமுகமதாய்
விண்டவாய் கூம்பக்
கழுத்துச் சரிந்தொரிரு
விழிசொருகி நாக்குவீழ்ந்து
விக்குளெழ மரணவே
தனையுறும் வஞ்சையர்கள்
வீட்டிலே பொருளிரக்கச்
சென்றிடா வரமும்உன்
திருவடிச் சேவையும்
சிறியனுக் கருளுகண்டாய்.
(செந்தமிழ்க்குலதெய்வம் பா. 8)

பொய்யுரைத் திழிந்த
புலையரைப் பாடிப்
பொருளிலாப் புன்மொழிபுலம்பி
ஐயையோ பொழுதை
அவத்திலே கழிக்கும்
அறிவிலேன் என்னையும்அருளி
(பொறுத்தபத்து பா. 2)

என்றெல்லாம் அவர் பாடும் போது நமது இதயம் வெடித்துவிடும்போலிருக்கிறது.

ii

ஈயாத செல்வரைப் பார்த்து 'சிறிது பொருளுதவி செய்யவேண்டும்' என்று புலவர் கேட்ட நிகழ்ச்சியைப் பார்த்தோம். இதற்கு எதிரான நிகழ்ச்சியைப் பிறிதோரிடத்தே புலவர் காட்டுகிருர். இருட்டும் ஒளியும்போல — இரவும் பகலும்போல — கருமையும் வெண்மையும்போல — பாலைவனமும் குளிர்சோலையும்போல இரு காட்சிகளும் தோன்றுகின்றன.

அதுவும் திறவாத படலை தான் புலவர்களைத்தவிர மற்றையோர் அணுகக்கூட முடியாத இடம். அங்கு இருக்கும் செல்வன் — இல்லை — செல்வச் சீமாட்டி யார் தெரியுமா?

மாவாழ் பொதிய மலையிற்
பிறந்து வரமுனிவன்
பூவாழ் கரமெனும் பொற்றொட்டி
லாடிப் புலவர்சங்கப்
பாவாழ் பலகை யிருந்தேட்டி
லேதவழ் பாவை
(இரட்டைமணிமாலை பா. 11)

இவள் மாளிகையை அணுகிய புலவர் 'தா' என்று இரக்கிருர்: தண்டனிட்டுக் கெஞ்சுகிருர்.

'தா' என்று இரந்த புலவருக்குப் 'போ' என்று விடை கிடைக்கிறது.

ஆனுலும் அவர் ஆனந்தம் கொள்கிருர். இது என்ன புதுமை!!

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# நீடுவாழ்க நேருஜி

— குகன் —

சாதிவெறி சமயவெறி தழைத்துநிற்கு முலகில்
சார்ந்தநிற வெறியோங்கிச் சடைத்தபெரும் புவியில்
சோதியென வந்தொளிசெய் போதமிகு தோன்ருல்!
சோகமுறு மேழைகளின் துயர்தீர்க்குந் தூயோய்!

உலகமெலா மோர்குடும்ப மென்னவே யெண்ணி
யுழைக்கின்ற வுத்தமர்க ளுன்போலு முண்டோ
திலகமென வறிஞரிடைத் திகழ்கின்ற ஜவஹர்!
தீமைதனை நீக்கவென வந்தாயிப் புவியில்.

தருமத்துக் கிழுக்கெங்கே சார்ந்ததெனப் பார்த்துச்
சிரமத்தை நோக்காது கருமஞ்செய் தீரா!
பரிந்துசுதந் திரம்வாங்கிப் பாரதத்தாய்க் கீந்தாய்
பலகாடு களுக்காகப் பரிந்தறப்போர் தோய்ந்தாய்.

பசிபிணிகள் நீங்கிப்பா ரதத்துறையு மக்கள்
பண்புடனே வாழவெனப் பணிசெய்து நின்ருய்
அசைவிலா வுள்ளத்தா லதர்மத்தை வென்று
அகதிகட்குப் புகலிடமா யணிபெறவே நின்ருய்.

தென்னு பிரிக்காவி னின்னுட்டு மக்கள்
திண்டாடக் கண்டுள்ளம் நொந்தேங்கி நின்ருய்
எந்நாட்டிற் போரெழினும் நின்னுடு போல
ஏற்றசமஞ் செய்தஹிம்சை காட்டமனங் கொண்டாய்.

சாந்தநிலை வாய்ந்தவெங் காந்தியார் தந்த
தநயனென எவருளத்துஞ் சார்ந்துநீ நின்ருய்
ஆழ்ந்தகடல் நடுமிளிரு மமெரிக்கா போந்து
அன்பினொடு புகழ்மாலை யாங்குநீ கொண்டாய்.

வியட்னு மெனப்பேரின் மேன்மைகொள் நாட்டை
மேவியங் கவருள்ளந் துள்ளநீ செய்தாய்
இயற்ருத கடமைக ளேதுமே யில்லை
யென்னநீ துயில்விண்டு செயல்கொண்டு நின்ருய்.

நின்தொண்டு ஒன்ருலே தானுலக முய்யும்
நின்பணியும் நின்வாழ்வும் நீண்டநாள் நிற்க
அன்பினொடு அகிலமதை யளித்தருளு மமலன்
அடியிணையைப்பலதரமும்அணிபெறநாம்பணிவோம்.

# உயிர்வர்க்கங்களின் உற்பத்தி

## தசாவதாரத்தின் நுண்பொருள்

பிரமஸ்ரீ
சி. சுப்பிரமணிய ஐயர்

[28-10-51-ன் தொடர்ச்சி]

ட்றைஸிக் (Triassic) உபகாலத்தில் பூமியில் முற்காலத்திற் காணப்பட்டவைகளுடன் களிமண்ணும், கூழாங்கற்களும் ஏராளமாகக் காணப்பட்டன.

பைன் (Pine tree) விருட்சங்களை யொத்த மரங்களும் இறகுபோன்ற இலையுடைய பூவில்லா மரங்களும் கடற்கரையோரங்களில் ஏராளமாக வளரத் தொடங்கின. மறு இடங்கள் சிறு காடுகளாகவும், பாலை நிலங்களாகவுங் காணப்பட்டன. மண்டைஞ்சுகளும் (Cycades), பனை தென்னை போன்ற மரங்களும் வளரலாயின. குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் ஒணான் போன்ற ஓர் சிறிய சீவவர்க்கம் இக்காலத்திற் ருேன்றியது. இவற்றுடன் நீரிலும், நிலத்திலும் வசிக்கும் ஆமைகளும் ஏராளமாகக் காணப்பட்டன.

ஜுருஸிக் (Jurassic) உபகாலத்தில் முற்கூறப்பட்டவைகளுடன் சுண்ணக் கற்களும், களிமண்ணும் அனேகமாகக் காணப்பட்டன. தாவரங்கள் ஏராளமாக வளர ஆரம்பித்தன. பல்லியையொத்த ஓர் பிரமாண்டமான பிராணியானது இக்காலத்திற் காணப்பட்டது. இது நீரிலும் நிலத்திலுஞ் சஞ்சரிப்பதோடு ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குத் தத்தவும் சதுப்பு நிலங்களில் வழுக்கிச் செல்லவும், மரங்களில் ஏறவும் தக்க அவயவங்களை யுடையதாகவுங் காணப்பட்டது.

நீரிற் சஞ்சரித்த முசலியானது (Ichthyosaurus) மூன்று தொடக்கம் 30 அடி வரை நீளமுடையதாயிருக்கும். இது நீந்துதற்கேற்ற நான்கு துடுப்புகளையும், மிக நீண்ட கூரிய வாலையும், பெரிய கண்களையும், தாடைகளில் (Jaw) பயங்கரமான 200 பற்களையுமுடையதாகவிருந்தது. இது அனேகமாக மீன்களையும், ஓடுடைய பிராணிகளையுமே உணவாகக் கொண்டது. இத்தகைய பிராணிகளின் கங்காளங்கள் ஏராளமாகப் பிரித்தானியா (Britain) விற் காணப்பட்டன இத்தகைய பிராணிகளுட் (Winosaurus) சில மிகப் பெரிதாகவும் 80 அடி நீளமுடையனவாகவுங் காணப்பட்டன. இவைகளின் எலும்புக்கூடுகள் உட்டா (Uta) என்னுமிடத்திற் காணப்பட்டன.

இவைகளைவிட நிலத்திற் சஞ்சரித்த முசலியானது (Igcanodan) நடக்கும்பொழுது 20 அடி உயரமுடையதாகக் காணப்பட்டது. இது தனது பின்னங்கால்களால் நடக்கவும், வாலினுற் கங்காரு (Kangaroo) வைப்போல் குந்தியிருக்கவும், முன்னங்கைகளால் தான் உண்ணும் இலைகளையும் சிறு கொம்பர்களையும் பிடிக்கத்தக்கதாகவுமிருந்தது. இதனுடைய தலையானது மிகப் பெரியதும், பட்சிகளின் சொண்டுபோல் நீண்டு ஒடுங்கியதுமாகும். இவைகளின் சேஷங்கள் கென்ற் (Kent) என்னுமிடத்தில் அதிகமாகக் காணப்பட்டன. இவைபோல் வேறு சில முசலிகளும் (Atlantosaurus) காணப்பட்டன. இவை 100 அடி நீளமுடையனவும், நிற்கும்பொழுது 30 அடி உயரமுடையனவாயுமிருந்தன. இவற்றின் கழுத்தானது வர வர நீண்டு ஒடுங்கிச் சிறிதாகக் காணப்பட்டது.

இதன் பின்னர் தோற்றிய முசலிவர்க்கங்கள் தங்களுடைய சத்துராதிகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குத் தத்தவும், ஒரு கொம்பரிலிருந்து மற்ருெரு கொம்பருக்குப் பாயவும், ஏறவும்,

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)


# தின வரவு இடாப்பு

[ATTENDANCE REGISTER]

இலங்கைத் தமிழ், ஆங்கில பாடசாலைகளிற் பெரிதும் விரும்பி உபயோகிக்கப்பட்டு வரும் எமது சிறந்த **தின வரவு இடாப்புகள்** அச்சாகி வெளிவந்துவிட்டன.

வழமைபோல் உயர்தரமான காகிதத்தில் 50 பெயர்கள் எழுதக்கூடியதாகவும்: வரவு பதியும் பக்கம் ஒவ்வொன்றும் ஐவைந்து பகுதிகளைக் காட்டக் கூடியதாய்த் தெளிவான இரட்டைக் கோடுக ளிடப்பட்டதாகவும்: ஆண் பெண், தகுதி-தகுதியற்ற மாணவர்களின் கூட்டுத் தொகைகளைப் புறம்பாகத் தனித்தனியே பதிவதற்கேற்ற மாதிரியாகவும் வேறும் புதிய திருத்தங்களுடன் விசேஷமான முறையில் அச்சிடப்பட்டுத் தடித்த வசையக்கூடிய அட்டை இடப்பட்டது.

விலை: ரூபாய் 1-50. :: :: தபாற்செலவு வேறு.

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

சுன்னுகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

விநியோக உரிமை:— சுன்னுகம்: திருமகள் புத்தகசாலை



புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஈழகேசரி

சுன்னுகம், கரவரு ஐப்பசி உடு
— காந்தி ஆண்டு 83 —
பேசுந் தந்தி இல. 805


## குடிசைத் தொழில்

**நமது** நாடு செல்வம் நிறைந்து உயர்நிலை யடைய வேண்டின் கைத்தொழில் களும் விருத்தியடைய வேண்டும். அந்நிய அரசினரின் ஆட்சியிற் கைத்தொழில் விருத்தி முற்ருகக் கிடைக்கவில்லை சுதந்திரமடைந்த பின்னர்தான் நமது அரசினர் இவ் விஷயமாக மிக்க சுறுசுறுப்பும் ஊக்கமுங் காட்டுகின்றனர்.

யுத்தகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட எத்தனையோ பெரிய கைத்தொழிற் சாலைகள் பெரும் நட்டங் காரணமாக இப்போது ஒவ்வொன்ருக மூடப்படுகின்றன. இதுவரையிற் பத்துக்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடப்படலாயின. இப்போது சப்பாத்துத் தொழிற் சாலையால் முப்பதினுயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டதாக அறிக்கையொன்று கூறுகின்றது. கைத்தொழில் மந்திரியார் செய்வது யாதெனவறியாது திகைக்கின்ருர். தொழிற்சாலை முற்று முழுதாக அரசினரால் நடத்தப்படும் வரை இவ்வித அலங்கோலங்கள் நிகழ்ந்துகொண்டே வரும். தொழிற்சாலைகள் ஆரம்பித்து நடத்துங்கால் பொது மக்களையும் அதிற் பங்குபெற உரிமையளிப்பின் இப்படியாக நட்டங்கள் வந்து சேரக் காரணமில்லை. அரசாங்கம் எந்த ஸ்தாபனத்தை நடத்தினும் அதைச் சூறையாடுவோருக்குக் குறைவில்லை

இப்போது கைத்தொழில் மந்திரியார் புதிய பெரிய தொழிற்சாலைகள் அமைப்பதில்லையென முடிவுசெய்துள்ளார். குடிசைத் தொழிலை ஊக்கப்படுத்தக் கருத்துக்கொண்டிருக்கின்றனர். இது விஷயமாகத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. கிராமங்களில் வசிக்குங் குடியானவர்கள் வீட்டில் வாளாவிருக்குங் காலங்களில் எத்தனையோ சிறிய தொழில்களை மிக்க ஆதாயத்துடன் செய்யமுடியும். ஆண்கள் மாத்திரமன்று பெண்களும் இத்துறையில் மிகப் பெருலாபத்துடன் நெருங்கி உழைக்கலாம். சீனு, யப்பான் முதலிய நாடுகளில் குடிசைத் தொழிலை ஆதாரமாகக்கொண்டு அந் நாட்டவரால் ஈட்டப்படும் செல்வத்துக்கு அளவில்லை. இவ்வாறு நமது இலங்கைத் தேசத்திலும் ஏன் செய்யக்கூடாது?

கிராமங்களில் இத் தொழில்களை நடத்த ஐக்கிய ஸ்தாபனங்கள் அமைப்பது அவசியம். அப்படிச் செய்யின் இத் தொழிலுக்கு வேண்டிய மூலதனம் கஷ்டமின்றிப் பெறவியலும். குடிசைத் தொழில் நாட்டிற் கிராமப் புறங்களிற் பெருலாபத்துடன் கைக்கொள்ளப்படின் கிராமவாசிகள் நகர்களை நோக்கிப் பிழைப்புக்காகச் செல்லவேண்டிய நியதியும் ஏற்படாது. அத்துடன் இத் தொழில் கிராமங்களில் இனிது நிலைபெறின், மக்களின் செல்வ வாழ்க்கையும் பன்மடங்கு உறுதியடையும். எனவே, அரசினர் போதிய ஆராய்ச்சி செய்து பல்வேறு குடிசைத் தொழில்களை நிலை நாட்ட முயல வேண்டும். பெரிய தொழிற்சாலைகளால் இலாபமடைவோர் ஒரு சிலரே. மேலும் அவைகளை நடத்தப் பெருந் தொகைப் பணமும் வேண்டும். இக் குடிசைத்தொழிலோ அதிக மூலதனமின்றிப் பெருந்தொகை மக்கள் நன்மையடையக் கூடியதாக நடத்தப்படலாம்.

## கொழும்பு விவேகானந்த சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஞாபகார்த்தப் பரிசு

இவ்வாண்டு கார்த்திகை மாதத்தில் வரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசைத் தினத்தன்று மாணவ மாணவிகளுக்கு இச் சபையினரால் பின்வரும் திட்டத்துக்கு அமையப் பரிசுகள் நாவலர் பெருமான் ஞாபகார்த்தமாக வழங்கப்படும்.

**க. பேச்சு வன்மைப் பரிசு —நான்கு. உ. கட்டுரை எழுதுதற்குரிய பரிசு —ஒன்று.**

பரிசுத் திட்டம் பற்றிய சகல விபரங்களுக்கும் பரீக்ஷா காரியதரிசி, விவேகானந்த சபை, மேட்டுத் தெரு, கொழும்பு, என்ற விலாசத்துக்கு எழுதவும்.

## பாலர்கள் கல்விப் பணி

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

### மானிப்பாயில்

**மானிப்பாயிலுள்ள** சாஸ்வதி ஞாபக நூல் நிலையத்தைப் பிரதம தேசாதிபதி அவர்கள் சென்ற புதன்கிழமை மாலை 5 மணிக்குத் திறந்து வைத்தார்கள். மானிப்பாய் நகரசங்கத்தலைவர் திரு. எஸ். எச். பேரின்பநாயகம் அவர்கள் உட்பட அவ்வூர்ப்பிரமுகர்கள்பலர் பிரதம தேசாதிபதி அவர்களை வரவேற்றனர். நூல் நிலையங்கள் வறியவர்களின் பல்கலைக் கழகங்கள் எனத் தெரிவித்த சேர்ல்பெரிப் பிரபு அவர்கள் நூல்கள் மக்களின் அறிவுக் களஞ்சியங்களாக விளங்குகின்றன என்பதையும் ஞாபகமூட்டியிருந்தார். அன்று மாலை மானிப்பாயில் ஏற்படுத்தப்பட்ட சேமிப்பு விழாவையும் பிரதம தேசாதிபதி அவர்கள் திறந்து வைத்தார்கள். இலங்கையின் வளர்ச்சியில் யாழ்ப்பாணம் என்றுமே முக்கிய பங்கு எடுத்து உழைத்து வருவதாகக் குறிப்பிட்ட பிரதம தேசாதிபதி அவர்கள் யாழ்ப்பாண மக்களின் சலியா உழைப்பையும் சிக்கன வாழ்க்கையையும் புகழ்ந்து பேசினுர். சேமிப்பு இயக்கத்தில் ஊக்கத்துடன் உழைத்துவரும் முதலியார் தியாகராஜா அவர்களின் உற்சாகமும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### தண்ணீர் வசதி

**யாழ்ப்பாணத்துக்குத்** தண்ணீர் வசதி மிக மிக முக்கியமானதென்பதை யாழ்ப்பாணப்பகுதிக் கிராமச் சங்கங்களின் சங்கத்தலைவர் திரு. வ. ரி. வேதாரணம் அவர்கள் சமீபத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டிருந்தார். கனகராயன் ஆற்றை வடமத்திய மாகாணத்து ஆறுகளில் ஒன்றுடன் இணையச் செய்து இரணைமடு ஏரியிலுள்ள நீரைப் பெருக்கினுல் அந்த நீரைக் குழாய்வழியே யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரச் செய்யலாமெனவும் அவர் யோசனை கூறியுள்ளார்.

## [illegible] ஓரத்தில் — பாட்டுக்காரி

**சிம்லாவில்** இப்போது ஐக்கிய நாடுகள் கல்வி சம்மேளனம் நடைபெற்று வருகின்றது. உதவிக் கல்வி மந்திரி திரு. கனகரத்தினம் அவர்களின் தலைமையில் இலங்கையிலிருந்தும் ஒரு கோஷ்டி சென்றுள்ளது. இவர்களுடன் திரு. எஸ். யூ. சோமசேகரம் அவர்களும் சென்றுள்ளார்கள். சிம்லாவுக்குச் செல்லும் வழியிற் சென்னையிலுள்ள மீனம்பாக்கம் விமான நிலையத்தில் திரு. கனகரத்தினம் அவர்களையும் ஏனையோரையும் கானரத்தினம் வி. வி. சடகோபன், மாகாண நீதிபதி திரு. வரதப்பச் செட்டியார், திரு. எம். டி. இராமன் ஆதியோர் வரவேற்றனர். சென்னையிலே தங்கியபோது திரு. கனகரத்தினம் அவர்கள் தமிழ்வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. அவிநாசிலிங்கம் செட்டியார், கலைக்களஞ்சியம் ஆசிரியர் தூரன் உட்பட வேறும் பல தமிழ்ப் பிரமுகர்களைக் கண்டு பேசினுர். ருஷியா சென்று திரும்பிய திரு. கிருஷ்ணன், திருமதி மதுரம், சினிமாத்துறைக் கலைஞர் சுப்பிரமணியம் என்பவர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்து வைபவத்துக்கும் விசேஷ அழைப்பின் பேரில் திரு. கனகரத்தினம் அவர்கள் பங்குபற்றினுர்கள் என அறிகின்றேன். திருமதி எம். எல். வசந்தகுமாரி, வைஜயந்திமாலா என்பவர்களும் திரு. கனகரத்தினம் அவர்களுக்கு விருந்துபசாரங்கள் ஏற்படுத்தியிருந்தனர் எனச் சென்னை அன்பர் ஒருவர் தெரிவிக்கின்ருர். இலங்கை இந்தியத் தொடர்பு இப்படித் தினந்தோறும் உரம்பெறுவதை யார்தான் விரும்பமாட்டார்கள்?

### சிம்லா சம்மேளனம்

சிம்லா சம்மேளனம் இம் மாதம் 21-ந் திகதி வரை நடைபெறும். இந்தியக் கோஷ்டியின் தலைவர் கே. ஜி. சாயிதைன் தலைமை வகித்து விரிவுரை யாற்றியுள்ளார். திரு. கனகரத்தினம் அவர்கள் இவ்விரிவுரையின் அச்சுப் பிரதி ஒன்றை ஈழகேசரிக்கும் சிம்லாவிலிருந்து அனுப்பிவைத்துள்ளார். வாலிபர்களே உலகத்தை வளம்பெறச் செய்யும் சிற்பிகள் என்பது இந்தியக் கோஷ்டித் தலைவரின் நம்பிக்கையாகும். இச் சம்மேளனம் உலக வாலிபர்களுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டுமெனத் தைரியமாகக் கூறலாம்.

## வரப்பெற்ருேம்

### தமிழ்நாடு

எச்சாதியினரும் எம் மதத்தினரும் எவ்வித நிலையினரும் இந்நாட்டு மக்கள். ஒருவித பேதமுமின்றி எல்லாருக்கும் சம உரிமைகள் உண்டு என முழங்கிக்கொண்டு தமிழ் மண்டலமான மதுரையிலிருந்து தமிழ் நாடு என்ற தினசரி வெளியாகிவருகின்றது. இதன் நிர்வாக ஆசிரியராக திரு. கருமுத்து தியாகராசன் அவர்கள் பணியாற்றுகின்ருர். உள்நாட்டுச் செய்திகளும் உலகச்செய்திகளும் விளக்கமாக அமைந்துள்ளன. அச்சு மிகத்தெளிவாக இருக்கின்றது. இப் புதிய தினசரியை வரவேற்று வாழ்த்துகின்ருேம். தனிப்பிரதி விலை: அணா 1 தபாற்பெட்டி இல. 49, மதுரை.

☼

### சிரஞ்சீவி

சிரஞ்சீவி தீபாவளி மலரிலே தமிழ்நாட்டுப் பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகளும் கதைகளும் சித்திரங்களுடன் வெளியாகியுள்ளன. கி. வா. ஜ. குகப்ரியை, சாலிவாஹனன், கேஸரி, கோ, அ. சம்பந்தம், பரணி குமார், ராமபாணம், அமரன், வே. ராமநாதன் ஆதியோரின் எழுத்தோவியங்கள் குறிப்பிடத்தக்கன, சினிமா நடிகைகளின் படங்கள் மூவர்ண எழிலுடன் விளங்குகின்றன. நடனக் கலைஞர் உதய சங்கர் பற்றிய குறிப்பும் மலரில் இடம் பெற்றிருக்கின்றது. விலை ரூ 1-8-0. விலாசம் ஆலத்தூர் சுப்ரமணிய ஆச்சாரி தெரு, சென்னை 7.

## எழுத்தாளர் சங்கம்

அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் சங்கமொன்று கொழும்பிலுள்ள 'ஸ்ராவஸ்தி' என்ற இல்லத்தில் 'ஆத்மஜோதி' கௌரவ ஆசிரியர் க. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் நோக்கங்களை திரு. கே. கணேஷ் எடுத்துரைத்தார். திரு. கே. பி. ஹரன், [illegible] இராமசாமி, எம். பி., திரு. அ. க. சுப்பிரமணியம், திரு. எஸ். நடராசா ஆதியோர் ஆலோசனைகள் கூறினர். சங்கத்தை அமைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கு திரு. இராமச்சந்திரனையும் (தலைவர்) திரு. அ. க. சுப்பிரமணியத்தையும் (செயலாளர்) கொண்ட ஒரு நிர்வாக சபை ஏற்படுத்தப்பட்டது.

## தார்த்தெருவிலே......தமிழ்!

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாசுப் போற்றி விழாச்செய்து தமிழின் அருமை பெருமை தெய்வமணம் முதலியவற்றையெல்லாம் பற்றிப் பிரசங்கமுஞ் செய்தார்களே! பல்லாயிரக்கணக்கான தமிழபிமானிகள் போய் அப் பிரசங்கங்களைக் கேட்டார்களே! இந்தியாவிலிருந்து வந்த தமிழபிமானிகள் போய்விட, இங்குள்ள தமிழபிமானிகள் இந்த அக்கிரமத்தைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கலாமா?''

☼ ☼ ☼

தேர்தற் பிரசாரம் தார் வீதிகளிற் குடுபிடிக்கத் தடம்புரளுவதை நன்கு அறிந்துகொண்டீர்கள். இனித் தேர்தலுக்கு முன்வந்து போட்டியிடும் அபேட்சகர்களைப் பற்றிக் கவனிப்போம். 15 வட்டாரங்களுள் 12-வது வட்டாரமே போட்டியின்றிக் காதி எம். எம். சுல்தான் (தமிழ்க் காங்கிரஸ்) அவர்களைத் தெரிவு செய்திருக்கின்றது. இவர் நகரசபையின் அங்கத்தவராகவே இருந்து வந்துள்ளார். ஏனைய 14 வட்டாரங்களுக்கும் எல்லாமாக 36 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களுட் சிலர் இதுவரை அங்கத்தினரா(க) இருந்தவர்கள். மேயர் ஸி. பொன்னம்பலம், வழக்கறிஞர் ஆர். ஆர். நல்லையா, திரு. எஸ். ஆர். தனையசிங்கம், திரு. ஜே. செபஸ்தியாம்பிள்ளை, திரு. டி. ஜேம்ஸ், திரு. ஈ. ரீ. ஹிச்கொக் ஆதியோர் இம்முறை போட்டியிடவில்லை. இதன் காரணமென்ன? இவற்றையெல்லாம் அடுத்தவாரம் ஆராய்ந்துஎழுதுகின்றேன்.

## வானிசை

★ வசந்தன் ★

### கொழும்பு வானொலி

வாத்தியக் கோஷ்டியுடன் பார்ட்டு

**இது அபஸ்வரம் மலிந்த** நிகழ்ச்சி என்பதை நிலையத்தவர் உணர்ந்தோ உணராமலோ இப்பொழுது நடத்தாமல் விட்டுவிட்டார்கள். உணர்ந்தாலும் சரி உணராவிட்டாலும் சரி, இவ்வித கீழ்த்தர நிகழ்ச்சிகளை நடத்திப் பொதுமக்கள் பணத்தை வீணுக்குவது விரும்பத்தக்க செய்கையல்ல.

நிலையத்தவர் நிலையத்திலே வாத்தியக் கோஷ்டி ஒன்றை ஏற்படுத்துவதற்கு வாத்தியக்காரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரியிருந்தும் இன்னும் வாத்தியக் கோஷ்டி அமைக்கப்படாதது காரியத்திற் சிரத்தையின்மையைக் குறிக்காதோ?

#### வளர் பிறை

இது 'ரேடியோ சிலோன்' நிகழ்ச்சி விபரங்களைக்கொண்டு வரும் வெளியீடு. இப்படி ஒரு வெளியீட்டுக்கு வளர் பிறை என்ற பெயர் பொருத்தமா? என்று ஒரு நண்பர் கேட்டார். அந்தப் பொருத்தமற்ற விஷயத்தை விட்டு வேறு ஏதாகிலும் பேசுவோம் என்றதற்கு, வளர் பிறையிற் குறிப்பிடும் நிகழ்ச்சிகள் வேருயும் நடப்பவை வேருயும் இருக்கின்றனவே? இதன் மர்மமென்ன? என்ருர். இந்த மர்மத்தை நிலைய அதிகாரியையோ நிகழ்ச்சிகளிற்பங்குபற்றுபவர்களையோகேட்டறிந்துசொல்லுகிறேன் எனச் சமாதானங் கூறினேன்.

#### தீபாவளி விசேஷம்

'ரேடியோ சிலோன், தீபாவளி நிகழ்ச்சிகளை விசேஷ நிகழ்ச்சிகள் எனக் குறிப்பிட்டிருந்தமை மிகப் பொருத்தமாயிருந்தது. தீபாவளி ஒரு விசேஷ தினம். நடைபெறும் நிகழ்ச்சிகளும் விசேஷ நிகழ்ச்சிகள் தாமே! நிகழ்ச்சிகள் உயர்தரமாகவோ அல்லது கீழ்த்தரமாகவோ அமையவில்லை. அத்தனையும் சாதாரணமாகவே யிருந்தன.

#### கச்சேரிகள்

சென்ற சனிக்கிழமை பிற்பகல் சங்கீத நிகழ்ச்சிகள் எல்லாம் பெண்கள் மயமாக விளங்கின. திருமதி பாஞ்சோதி அம்மாவின் இடத்தைத் திருமதிகள் கமலாவும் பகவதியும் நிரப்பினுர்கள். அன்று இரவு வீணை வாசித்தவர் கர்நாடக சங்கீதத்துக்குள் இந்துஸ்தானியையும் கலந்து குழப்பினுர். அதன் பின்னர் பாடியவர் நன்ருகப் பாடினுர்.

#### கச்சேரி நேரங்கள்

வாய்ப்பாட்டுக் கச்சேரிகளிலும் பார்க்க வாத்தியக் கச்சேரிகளுக்கு அதிக சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது என்றும், பாட்டுக் கச்சேரிகள் அகால நேரங்களில் நடைபெறுகின்றன என்றும், பெண்மணிகளுக்கு இரவு 9 மணிக்குமேல் கச்சேரிகள் கொடுப்பதால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன என்றும் கலைஞர்கள் பலர் பேசிக்கொள்கின்றனர்.

#### பிரயாண வசதி

கச்சேரி செய்பவர்களுக்கு இதுகாறும் இருந்து வந்த போக்குவரத்து வசதிகள் இப்போது இல்லை. கொழும்பிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் வருபவர்கள் கொழும்பு வானொலி நிலையத்துக்குச் சென்று திரும்புவதற்கு ஒழுங்கு செய்த இலவச 'வான்' சேவை இப்போது நிறுத்தப்பட்டாயிற்று. இதனுற் கலைஞர்களுக்கு வெகு சிரமம் ஏற்பட்டிருக்கிறது என அறிகின்ருேம். தங்கள் சொந்தப் பொறுப்பில் மோட்டார் ஒழுங்கு செய்வதோ அல்லது 'ரேடியோ சிலோன் வான்'களுக்குக் கச்சேரி செய்து வரும் பணத்தில் ஒருபங்கைக் கொடுப்பதோ கலைஞருக்கு நட்

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருஜி நல்லிணக்கம் பாகிஸ்தான் உடன்படுமா?

காஷ்மீர் சமஸ்தான அரசியல் அமைப்புச் சபை பெரிய வைபவங்கட்கிடையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அத்தருணம் இச்சமஸ்தான அரசியற்றலைவர் ஷேக் அப்துல்லா அவர்கள் கூறிய பொன்னுரை குறிப்பிடத்தக்கது. அவர் கூறியதாவது:

"காஷ்மீரின் எதிர்காலம் என்றும் இந்தியாவுடன் நெருங்கிய சம்பந்தமுடையது. சனநாயகத்தையே சமஸ்தான மக்கள் மேற்கொண்டு செல்வர், சமயக் கோட்பாடுகள் கலகங்கட்கு இங்கு இடமில்லை. காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்திருந்தாற்றான் இந்தியாவிலுள்ள நாலுகோடி முஸ்லீம்களுக்கும் பாதுகாப்பும் ஆறுதலுமாகும். சமயம்! சமயம்!! என்று கூக்கிரலிட்டுப் பாகிஸ்தான் எம்மை ஏமாற்றவியலாது. சமய விஷயமாகப்பார்த்தாலும் காஷ்மீர் சமஸ்தானம் முஸ்லீம் இந்தியாவிலுள்ள நாலுகோடி முஸ்லீம்களுடன் சேர்வதா அல்லது மேற்குப் பாகிஸ்தானிலுள்ள இரண்டரைக்கோடி முஸ்லீம்களுடன் சேர்வதா? பொருளாதார விஷயமாக நோக்கினும் நமது தொடர்பு இந்தியாவையேநாடி நிற்கின்றது. காஷ்மீரில் தயாரிக்கப்படும் பொருள்கள் இந்தியாவிலேயே விலைப்படுவன. காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேர்ந்தால் அங்குவசிக்கும் 15 இலட்சம் மற்றைய சமயவாதிகள் பரிதாப நிலையை அடைய வேண்டியதே. இப்போது ஏற்பட்ட அரசியற் சபை நான்கு விஷயங்களை முடிவுசெய்யும் 1. சமஸ்தான அரசாங்க அமைப்பு நிறுவுதல் 2. அரசவமிசத்தினர் நிலையை முடிவுசெய்தல் 3. நிலங்களைப் பொதுமக்கட்கிடையில் பகிர்ந்து கொடுத்தல் 4. காஷ்மீர் இந்தியாவுடனு, அன்றேல் பாகிஸ்தானுடனுசேர்வது என்பதை முடிவுசெய்தல்

### நேருவின் முயற்சி

அயல் நாடாகும் பாகிஸ்தானுடன் நல்லிணக்கத்தை நாட்டப் பிரதமர் நேரு அரிய முயற்சி செய்து வருகின்றனர்.

### இந்தியா

பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலி கான் இறந்த பின்னர் இருநாடுகட்கு மிடையில் ஏற்பட்டுவந்த ஆத்திரமும் மனப்பீதியும் சிறிது அடங்கி நல்ல மனப்பான்மை ஏற்பட்டுவருகின்றது. இரு நாடும் ஒன்றுடனொன்று யுத்தத்துக்குச் செல்வதில்லை யென்ற உடன்படிக்கை செய்வதவசிய மென்று பிரதமர் நேரு எடுத்துக்காட்டியுள்ளார். தமக்கிடையில் ஏற்படுங் கஷ்டங்களை விசாரித்து ஆராய்ந்து நல்மனதுடன் தீர்க்கவேண்டு மென்பதே இவர் வேண்டுகோள். பாகிஸ்தான் அரசினர் இதற்கு இணங்குவாரென்பதேஎமது அபிப்பிராயம்.

### அமெரிக்கர் கூற்று

சமீபத்தில் இந்தியாவிலும் காஷ்மீரிலும் பாகிஸ்தானிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்து அமெரிக்கா திரும்பிய அரசியல் மேதாவி ஒருவர் சமீபத்திற் பத்திரிகையில் வெளியிட்ட விஷயம் காஷ்மீரின் உண்மை நிலையை வெளிக்காட்டும். இவர் நேரே காஷ்மீரில் கண்டறிந்தவற்றை எவரும் இலகுவில் மறுத்துவிடவியலாது. ஷேக் அப்துல்லாவின் தலைமைக்குக் காஷ்மீரில் ஒருபோதும் பங்கம் வரமாட்டாதாம். 25 வருடகாலமாக இவர் காஷ்மீர் மக்களின் மீட்சிக்காகத் தேசிய முறையில் செய்த தொண்டுகள் தியாகங்கள் இம்மட்டன்று. இவருடைய எண்ணப்படியே இச்சமஸ்தான மக்கள் நிற்பர். மேலும் காஷ்மீரில் வகுப்புவாதமென்பது கிடையாது. எல்லா மதத்தினரும் சாதியினரும் எவ்வித வித்தியாசமுமின்றி ஒற்றுமையாக வாழ்கின்றனராம். அத்துடன் காஷ்மீர்ப் பொது மக்கட்கு நிலங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டாய் விட்டது. இந்நிலையில் காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேர எப்போதாவது விரும்பு மென்றதெல்லாம் வீண் வாதமாம். இந்த அமெரிக்க பிரயாணிகூறுவதை மறுப்பதெப்படி?

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 7600**

சண்டிருப்பாய்,

சோமசுந்தர சருமா பெண் ஞானேஸ்வரி வழக்காளி

சங்கானை,

1. சபாபதிக் குருக்கள் சிவ சுப்பிரமணியக் குருக்கள்

சண்டிருப்பாய்,

2. இரத்தினேஸ்வரக் குருக்கள் சோமாஸ்கந்த சருமா

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7600-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியும் ஈட்டுறுதியும் தனித் தனி 1951-ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 5-ம் திகதி (5-12-51) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 762/-ம், இதில் ரூபாய் 700/-க்கு 8-3-51 திகதி தொடக்கம் 17-7-51 திகதி வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 188-80 சதம்.

### காணியின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானையிறை, "குலவரம்பு" கிலேப்பரப்பு நாற்பது (40-ம்) மற்றும் பயிர்களும். எல்லை கிழக்கு, சிற்றம்பலம் சபாபதிக்கும் பொன்னையா பெண் பருபதத்திற்குமுரிய ஆதனங்கள். வடக்கு, வினாயர் மூனாகருக்கும் சிவசம்பு பெண் நாகம்மாவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு, சபாரத்தினம் அரியரத்தினத்திற்குரிய ஆதனமும் ஒழுங்கையும். தெற்கு, ஒழுங்கை. இதில் சொரியலாய் அரைவாசி ($\frac{1}{2}$) முற்பதிவு E 248/102.

### இட்டுறுதியின் விபரம்

2. 1949-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9-ந் திகதி நொத்தாரிஸ் கே. வல்லிபுரம் முகதாவில் 1198-ம் இலக்கத்தில் புலோலி சோமசுந்தரக்குருக்களும் பெண் அமிர்தேஸ்வரியும் சோமசுந்தரக் குருக்கள் சதாசிவ ஐயரும் இந்த வழக்கில் 2-ம் எதிராளிக்கு ரூபா 450/க்கும் 100-க்கு 8% வீத வட்டிக்குமுரியஈட்டுறுதிவிற்கப்படும்.

### இட்டுக் காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று, நீர்வேலியிறை, "கொச்சன் கிணற்றடியும் உப்புக்கிணற்றடியும்" கிலேப்பரப்பு ($4\frac{1}{2}$-ம்) வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு, ஊக ஒழுங்கை. வடக்கு, விஞசித்தம்பி பெண் சின்னச்சிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு, கார்த்திகேசுக் குருக்கள் பெண் குப்பம்மாவின் ஆதனம். தெற்கு, சதாசிவ ஐயர் பெண் புவனேஸ்வரி அம்மாவின் ஆதனம் இதடங்கலும்.

முற்பதிவு K 72/109.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை, 1-11-1951

[4453]

---

## வானிசை.

4-ம் பக்கத் தொடர்ச்சி

டத்தை அதிகப்படுத்துவதாகும். அத்துடன் உற்சாகமும் குறைந்துவிடும் என்பதில் ஐயமில்லை. இதை நன்கு ஆராய்ந்து 'ரேடியோ சிலோன்' அதிகாரிகள் நீதியான வழிகளைக் கையாள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

### வாழ்க்கைச் செலவு

உத்தியோகங்கள் பார்ப்பவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் விசேஷ வாழ்க்கைப்படிகள் வழங்கப்படுகின்றன. கலைஞர்களுக்கு ஏதாகிலும் அப்படிக் கொடுக்கிறார்களா? இல்லை. ஏன் இந்தச் சீர்கேடான நிலை? நிலையத்திலே பக்கவாத்தியங்களை ஒழுங்கு செய்தவுடன் பக்கவாத்தியங்களைச் சுட்டிக்காட்டிப் பாடகர்களின் பணம் இன்னும் குறைபட்டால், பாடகர்களின் கதி அதோகதிதான்!

## கலைகளின் ஒருமைப்பாடு

**அரியாலையிற் கலைக்கழகம்**

கலைகள் பலதிறப்பட்டுப் பெருகிவரினும் எல்லாவற்றிலும் ஓர் ஒருமைப் பாடிருப்பதாக ஆசிரியர் இ. அம்பிகைபாகன் அவர்கள் கலைவளர்ச்சி என்னும் விஷயம் பற்றி அரியாலையிலுள்ள கலைக் கழகத்திற் பேசும்போது குறிப்பிட்டார். இக்கழகத்தின் காரியாலயம் சமீபத்தில் திரு. க. குகதாசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கலைக் கழகத்தின் நோக்கங்களை திரு. க. வ. தியாகராஜன் எடுத்துரைத்தார். கழகத்தினர் 'கலாஞானி' என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடாத்திவருகின்றனர். திரு. பொ. தருமலிங்கம் இதன் ஆசிரியராவார். செயலாளர் சி. துரைசுவாமி அனைவருக்கும் நன்றி கூறினர்.

## ஓமந்தை அரசினர் பாடசாலை

ஓமந்தை அரசினர் தமிழ்ப் பாடசாலைப் பெற்றோர்தின விழா வடமாகாணப் பகுதி வித்தியாதரிசி திரு. அ. சரவணமுத்து அவர்கள் தலைமையிற் சென்ற சனிக்கிழமை (3-11-51) நடைபெற்றது. ஏராளமானோர் சமூகமளித்தனர். மாணவரின் நடன நாட்டிய நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கன. வித்தியாதரிசி ஏ. அருளையா அவர்களும், கிருஷிக போதகாசிரியர் எஸ். காராளசிங்கம் அவர்களும், விரிவுரைகள் ஆற்றினர். வவனியாப் பகுதிப் பிரதிநிதி திரு. வி. சுந்தாலிங்கம் அவர்களும் சமூகமளித்து விரிவுரையாற்றினர். தலைமையாசிரியர் திரு. செ. சிவலிங்கம் அனைவருக்கும்நன்றிகூறினர்.

## உயிர்வர்க்கங்களின் உற்பத்தி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கவுந் தக்க அவயவங்களையுமடைந்தன. இத்தகைய வர்க்கங்களுள் முதற் றோன்றிய மிருகங்களின் (Ptero dactyle) சிறகுகள், வெளவால்களுடையசிறகுகளைப்போல விரியக்கூடியனவாயும், கூரிய நீண்ட நகங்களையுடையனவாயும், பற்களையுடைய அலகுடையனவாயுங் காணப்பட்டன. இவைகளுட் சிலவற்றின் இறகுகள் 20 அடி நீளமுடையனவாகும். இவைகளிலிருந்தே பறக்கும் பறவைகள் தோற்றலாயின. (தொடரும்)

## காரியாதிகாரி ஸ்ரீநிவாசன்

"இலங்கையில் இன்றைக்கிருக்கும் சமாதானம், செல்வம், பசிப்பிணியின்மை ஆகியவைகட்குப் பிரதமர் சேனநாயக அவர்களே காரணம்" என்று பொதுவில் காரியாதிகாரி திரு. ச. ஸ்ரீநிவாசன் அவர்கள் சென்ற சனிக்கிழமை அவருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைக் கூட்டத்திற் பேசும்போது குறிப்பிட்டார்.

முதலியார் இபுறுகிம் எம். பி. அவர்கள் தலைமைப் பேருரையில் திரு. ஸ்ரீநிவாசன் அவர்கள் செய்த நன்மைகளைத் தானும் பொதுவில் மக்களும் என்றென்றும் மறக்க முடியாதெனக் கூறினர்.

---

**கொழும்பு நிருபர் கடிதம்**

# கைலஞ்ச ஊழல்கள் நாவலர் ஞாபகார்த்தப் பரிசு

8-11-51

இலங்கையில் அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடையே இலஞ்ச ஊழல்கள்நீடித்துசிற்பதுபற்றிப்பொது மக்கள் அசிரத்தையாயும் பராமுகமாயும் இருப்பதையிட்டு இலஞ்சவிசாரணைச்சபைத் தலைவர் திரு. ஏ. ஈ. கெனமன் தமது அறிக்கையில் வருத்தம் தெரிவித்துள்ளார். இலஞ்ச ஊழல் நிலவுவதைத் தடுக்க முடியாதெனப் பொது ஜனங்கள் கருதுகின்றனர். "ஆர்குத்தியும் அரிசியானல் சரிதானே என்ற மனப்பான்மை பொது மக்களிடையே நிலவிவருவதால் இலஞ்சம் பெறுபவர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டமாகவேயிருக்கின்றது. கொடுப்பவரும் பெறுபவரும் ஒத்துக்கொண்டால் பிடிப்பது கஷ்டம் ஆனல்இலஞ்சம் கொடுக்கும்பொழுது எவ்வளவு வயிற்றெரிச்சலுடன் சில சமயங்களில் நகைநட்டுகளை அடைவு வைத்துப் பணம் எடுத்துக் கொடுக்கிறார்கள் என்பதை நோக்குமிடத்து இக்கொடிய நோயை வேருடன் களையப் பிரசார இயக்கமும் பொது சனங்களின் ஒத்துழைப்பும் தேவை. பொது சனங்கள் மட்டுமல்ல படித்தவர்களின் உதவியும் தேவையென்றே கூறவேண்டும்.

இவ்வருடம் கார்த்திகை மாதத்தில் வரும் நாவலர் பெருமான் தினத்தன்று கொழும்பு விவேகானந்த சபை 'நாவலர் பெருமான் ஞாபகார்த்தப் பரிசு' எனப் பேச்சுவன்மைக்காக நான்கு பரிசுகளும் கட்டுரை வன்மைக்கு ஒரு பரிசும் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நாவலர் அவர்களுடைய நூல்களைச் சிறந்த முறையில் கண்கவர்வனப்பினவாக அச்சிட்டு, வெளியிடவேண்டியது அத்தியாவசியமாகின்றது. இக்காலத்தில் பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராணவசனம் முதலிய நூல்கள் வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்டு வெளிவருகின்றனவாயினும் வசன அமைப்பிலும் பக்தியைப் பெருக்கும் முறையிலும் நாவலர் வசன நூல்கள் தலைசிறந்து விளங்குகின்றன. ஆனல் அவை பழைய காலமுறையிலே இன்றும் வெளிவருகின்றன. இக்காலத்துக்கேற்ற நவீன சம்பிரதாயங்களையும் நூல் வெளியிடுதலிற் பின்பற்ற வேண்டியதாகவேயிருக்கிறது. அங்ஙனம் செய்யாதுவிடின் நாவலர் நூல்களை வாங்கிக் கற்போர் தொகை அருகிக்கொண்டே வரும். இவற்றைவிட நாவலர் பொன்மொழிகள் சிலவற்றைத் தொகுத்துச் சிறு நூலாக வெளியிட்டுச் சைவ மாணவர்களுக்கு இலவசமாக நாவலர் குருபூசைத்தினத்தன்று வழங்கும் திட்டமொன்றைச் சைவ ஸ்தாபனங்கள் மேற் கொள்ளலும் விரும்பத்தக்க தொன்றாகும்.

### உதய சங்கர்

பிரபல இந்திய நடிகர் உதய சங்கரும் அவர் மனைவி அமலாவும் அவர்களின் கோஷ்டியும் 'சவோய்' தியேற்றரில் இவ்வாரம் முழுவதும் தினந்தோறும் நாட்டிய நிகழ்ச்சிகளைக் காட்டி வருகின்றனர். ஏராளமான சனங்கள் சென்று பார்க்கின்றனர். இதற்கிடையில் ஷேக்ஸ்பியர் நாடகங்களை நடிக்கும் ஆங்கில நாடகக் கோஷ்டியொன்று றீகல் தியேற்றரில் நாடகங்களை நடித்துக் காட்டுகின்றது. இரு பிரபல்ய கோஷ்டிகள் ஒரே முறையில் வந்திருப்பதால் இருவகை நிகழ்ச்சிகளுக்கும் பலர் செல்கின்றனர்.

### அரசாங்க விடுமுறைகள்.

அரசாங்க விடுதலை நாட்களை மாற்றியமைப்பது பற்றி அரசினர் இப்போது ஆலோசித்து வருகின்றனர். இந்துக்களுக்குச் சிவராத்திரி நாள் விடுதலை நாளாக விருக்கும். நத்தார் விடுமுறையைக் குறைப்பது பற்றி அரசாங்க ஊழியர்கள் முணுமுணுக்கின்றனர். இது பெரும்பாலும் தமிழர்கட்கு ஒருவரப்பிரசாதமாக இருந்தது

---

## ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கப் பரீட்சைப் பெறுபேறுகள்

**பண்டித பரீட்சை—1951**

ப. 19 கா. இராசையா, தாவடி தமிழ்ப்பாடசாலை; ப. 21 செ. செல்வரத்தினம், சென்ற் ஜேம்ஸ் ஆண்பாடசாலை, யாழ்ப்பாணம்.

**நூனசித்தி** (முதன்முறை)

ப. 7 ச. கந்தசாமி, சூளானை, சுன்னாகம் [iv-ம் பாடவகை]; ப. 12 ம. முருகேசு, ஆசிரியர், கொடிகாமம் [இலக்கணம்].

**நூனசித்தி** (இரண்டாம்முறை)

ப. 16 வ. நல்லதம்பி, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை [இலக்கணம்]; ப. 18 இ. புனிதவதி, கனிஷ்டபாடசாலை, நயினாதீவு [iv-ம் பாடவகை]; ப. 28 நா. இராஜையா, கோண்டாவில்மேற்கு [iv-ம்பாடவகை],

---

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்**

**ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை:**

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**

க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா கோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[4438]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**ஜாவா யாத்திரை:** ஆசிரியர்: ரவீந்திரநாத் டாகுர்; மொழிப்பெயர்ப்பு: த. நா. குமாரஸ்வாமி; பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பனி, சென்னை 4; விலை ரூ. 2-

சிங்கப்பூர், ஜாவா, பரித்தீவுகளுக்குத் தாகூர் 1927-ல் யாத்திரை சென்றார். அங்கிருந்து உறவினர், நண்பர்கட்கு எழுதிய 20 கடிதங்கள் இதில் உள்ளன. பிரயாணக் கட்டுரைகள் என்றுதான் இவற்றைச் சொல்லவேண்டும். கவிஞரின் சிந்தனை எங்கெல்லாமோ சுற்றுகின்றது. எம்மையும் அங்கெல்லாம் அழைத்துச் செல்கின்றார்.

தாகூர் காணும் அழகை நாமும் காண்கிறோம்; இன்பம் எய்துகிறோம். அவர் சுவைக்கும் கலையை நாமும் சுவைக்கிறோம். அவரது ஓய்வின்மை, பிரயாண அலுப்பு, எம்மையும் வருத்துகிறது.

இந்துமதச் சின்னங்கள் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள ஜாவா, பரித்தீவுகளில் பரவிக் கிடப்பதையும், இதிகாசம், புராணம், சிற்பம், நடனம் ஆகியவற்றில் இந்தியாவுக்கும் அத்தீவுகளுக்கும் இடையில் இருக்கும் ஒற்றுமையையும் ஆய்ந்து விளக்குகிறார். தாகூரின் கலையுணர்வும், மெய்யுணர்வும் எம்மையெல்லாம் வியக்கச் செய்கின்றன. பழைய புராண, இதிகாசங்களில் அவர் காணும் புதிய கருத்துகள் எவரும் ஏற்கத்தக்கன.

பரி நாட்டுமக்களின் கலை வாழ்வு, முகமூடி நடனம், ஜாவாவில் கண்ட சிறந்த நடனம் ஆகியவற்றையெல்லாம் பல கடிதங்களில் விரித்துள்ளார்.

சொல்லைத் துணையாகக் கொண்டது காவியம். சொல்லுக்கு எட்டாததோர் அழகு இவ்வபூர்வ நடனத்தில் தென்படுகிறது என்று ஜாவாவில் தான் கண்ட இரு சிறுமியரின் நடனத்தின் உயர்வைக் குறிக்கிறார். பன்னிரண்டாவது கடிதம் கவிஞரின் சுதந்திர உணர்ச்சி, நாட்டுப்பற்று ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.

த. நா. குமாரஸ்வாமி அவர்கள் சிறிய வசனங்களில் மிக அழகாக மொழி பெயர்த்துள்ளார்கள். தகுந்த சொற்பிரயோகத்தில் மிகுந்த சிரத்தை எடுத்துள்ளார்கள். தமிழாக்கத்தில் இஃதோர் சிறந்த எடுத்துக்காட்டு என்று கூறலாம்.

— செ. கணேசலிங்கன்


## விளம்பரம்

குரும்பசிட்டி
ஐக்கியபண்டகசாலை J/585

ஷை பண்டகசாலைக்கு ஒரு கட்டிடம் அமைப்பதற்கு, ரூபா 3500/-ற்கு மேற்படாமல் ஒப்பந்தகாரரிடமிருந்து (Contractors) கேள்விப்பத்திரங்கள் (TENDERS). 15 11-51 வரை ஏற்றுக் கொள்ளப்படும். மற்றைய விபரங்களைக் காரியதரிசியிடம் நேரில் அல்லது கடிதமூலம் அறிந்து கொள்ளலாம்.

நா. சிவசாமி
காரியதரிசி
ஷை பண்டகசாலை
நிர்வாகசபைக்காக.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை, 31-10-51.

[4449—ii]





**பவளமல்லிகை:** ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; பிரசுரம்: அமுதநிலையம் லிமிடெட், சென்னை 18; விலை: ரூபா 2-0-0

பவளமல்லிகை என்ற கதையை முதற்கதையாகக் கொண்டு மற்றைய ஏழு கதைகளையும் 'கதைக்குக் கால் உண்டு' என்ற ஒருகட்டுரையையும் கொண்டது இந்நூல். கண்ணன் பக்தியினால் பவளமல்லிகை தேடியலைந்து கால் ஊனமான அம்புஜம் (பவளமல்லிகை) கலையோடு ஒன்றிக் கல்யாணத்தை மறந்துபோன நீலன் (ரத்தக்கண்ணீர்) ஆகிய பாத்திரங்களை நாம் மறக்க முடியாதபடி ஆசிரியர் மிக அழகாகச் சித்திரித்திருக்கிறார். 'பஞ்சகல்யாணிக் குதிரை' என்ற கதை பாலர் பகுதிக் கதையைப் போல இருக்கிறது. ஆரம்ப. எழுத்தாளர்களுக்குக்கடைசிக்கட்டுரை மிக உபயோகமானதாகும் 'பிள்ளைத் தாய்ச்சி' என்ற சொல்லைப் பால்கொடுக்கும்தாய் என்றகருத்தில் ஆசிரியர் உபயோகித்திருக்கிறார். ஈழநாட்டில் இச்சொல் கர்ப்பிணி என்ற கருத்திலேயே வழங்கப்படுகிறது.

●

**புஷ்பபாணம்:** ஆசிரியர்: எல்லார்வி; பிரசுரம்: அமுதநிலையம் லிமிட்டெட், சென்னை 18; விலை: அணா 8

ஒன்றுபட்ட உள்ளத்தோடு வாழ்ந்த இரு குடும்பங்களையும் அவற்றில் இருக்கும் குழந்தைகள் ஆடிய ரதி—மன்மதன் விளையாட்டையும் பிறகு குடும்பங்களில் நேர்ந்த கஷ்டங்களையும் மத மாற்றத்தினால் விவாகம் தடைபடுதலையும் இறுதியில் எல்லாம் சுபமாக முடிதலையும் கொண்ட சாதாரண கதை இது. மிகச் சிறிய எழுத்தில் அச்சிடப்பட்டிருப்பதாற் படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது.

—க. செ.

Important for youths.

●

**குழந்தை எப்படிப்பிறக்கிறது?** ஆசிரியர்: பொ. திருகூடசுந்தரம்; பிரசுரம்: காந்திநிலையம், சென்னை 17; விலை: ரூ 1-12-0.

இந்நூல் சென்னை அரசாங்கத்தாரிடம் பரிசுபெற்ற நூல். சிலசமயங்களில் சற்று விவரந்தெரிந்த பிள்ளைகள், வீட்டிலிருக்கும் பெரியவர்களிடம் எக்கச்சக்கமான சில கேள்விகளைக் கேட்கக்கூடும். பருவமடைந்தவர்கள், ஏன், அடையாதவர்களுங்கூட, இவ்வுலகில் மனித வர்க்கத்துக்குள் புதிய உயிர் ஒன்று எவ்வாறு தோன்றுகின்றதென்னும் விபரங்களை அறிய முயல்வது இயற்கையே. இத்தகைய கேள்விகளுக்கு விடையளிக்கத் தெரியாதவர்களுக்கும், விடையளிக்கக் கூசுபவர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும். அப்பாவுக்கும் பத்துவயதுப் பெண்குழந்தைக்கும் நடந்த சம்பாஷணை ரூபமாக இந்நூல் அமைந்திருக்கிறது. ஜனனேந்திரியங்களின் அமைப்புகளையும், அவற்றின் வேலைகளையும், கர்ப்பத்தில் சிசு உற்பத்திவளர்ச்சி பிரசவம் முதலிய எல்லா விஷயங்களையும் அவசியமான படங்களுடன் தெளிவான முறையில் ஆபாசமென்பது சிறிதுமின்றி விளக்கும் இந்நூல் பின்னொருகாலத்தில் பள்ளிக்கூடங்களிற் பாட புத்தகமாக வைக்கப்படுமென்றுகூட இப்போதே கூறிவிடலாம். இது ஒருபுறமிருக்க, இதைப் படிப்போர் யாவரும், இந்நூலிற் கூறப்பட்டிருக்கும் விஷயங்களில் ஐயந்திரிபற்ற அறிவை அடைவது எளிதாகும். இதே ஆசிரியர் எழுதிய "விவாகமானவர்களுக்கோர் யோசனை" என்னும் நூலும் இதனுடன் சேர்த்துப்படிக்கத் தகுந்தது

—ஸி. எஸ். ஜி.

●

**கோடை மழை:** ஆசிரியர்: காண்டேகர்; மொழிபெயர்ப்பாளர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ; பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பனி, சென்னை 4; விலை: ரூ 1-0-0.

காண்டேகர் தமிழர்கள் உள்ளங்களில் அழியா இடம் பெற்றவர். இந்நூலிற் கோடைமழை, செயற்கை முத்து, காணாத கடவுள், மாற்றாந்தாய் ஆகிய நாலு சிறுகதைகள் உள்ளன. அவரது உயர்ந்த சிந்தனை, அறிவுத் தெளிவு, தத்துவக் கொள்கை, கருத்துப் புரட்சி ஆகியவற்றை இச் சிறு கதைகள் பிரதிபலிக்கின்றன.

விறு விறுப்பான நடை, சாதாரண உவமானங்கள், ஆழ்ந்த கருத்துக்கள் ஆகியவற்றை இச் சிறு கதைகளில் காணலாம்.

கிழத்தனத்திலும் பாலியம் திரும்பும் என்பதை நாற்பது கோடையையும், நாற்பது மழையையும், பேரப்பிள்ளையையும் கண்ட பார்வதியின் வாழ்க்கையின் மூலம் எடுத்துக்காட்டுகிறார், 'கோடை மழை' என்ற சிறுகதையில்.

மனிதனின் காட்டுமிராண்டி முன்னோர்கள், அடிக்கடி அவன்மீது ஆவேசமாக வருவதுண்டு. அதுதான் குடும்பப் பிணக்குத் தொடக்கம் கோரப்போர் வரைக்கும் காரணமாயுள்ளது என்ற தத்துவக் கருத்தைத் தாங்கியது 'செயற்கை முத்து' என்னும் சிறுகதை. நாலு கதைகளிலும் சிறந்தது இதுவே. கதையைப் படிக்கும்போது சிறுகதை மன்னன் மாப்பாசானின் 'போலிவைரங்கள்' என்ற உலகப்பிரசித்தி பெற்ற சிறுகதைபோல் முடியுமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஆனால் அப்படி முடியவில்லை. இந்தியப் பண்பாட்டை ஆசிரியர் மறக்கவில்லை—காப்பாற்றுகிறார்.

மூன்றாவது உலகப்போரின் வெற்றிக்குக் காரணமாயிருந்த ஓர் விஞ்ஞானியின் காதலியின் குதூகல உள்ளத்தில், போரின் கோரத்தை, தன் பிள்ளைகளை அதற்குப் பலியிட்ட தாய் ஒருத்தி விதைக்கிறாள். அவள் உள்ளத்தில் விஷப்புண் புரையெடுக்கிறது. பிணத்தின் முத்தம் கிடைக்கிறது விஞ்ஞானிக்கு. (காணாத கடவுள்) மனிதன் எப்போதும் தன் துன்பத்தைப் பூதக்கண்ணாடி கொண்டு பெருப்பித்துப் பார்க்கிறான். அதனால் உண்மை தெரிவதில்லை என்ற தத்துவக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது, 'மாற்றாந்தாய்'. பூக் கிடையாதபோது மாற்றாந்தாய்மேல் குறை கூறும் குழந்தையின் உள்ளத்தையும், காதல் கலியாணமாகாதபோது கதைகளின் மூலமாகப் பெண்களின்மேல் வஞ்சம் தீர்க்கும் எழுத்தாளன் பிரபாகரனின் மனதையும் அழகாகப் படம்பிடிக்கிறார் இச் சிறு கதையில், சுவை சிறிதும் கெடாது கா. ஸ்ரீ. ஸ்ரீ. அவர்கள் அழகாக மொழிபெயர்த்துள்ளார்.

—செ. கணேசலிங்கன்

●

**மந்தரை சூழ்ச்சி** – ஆசிரியர்: பொ. திருகூடசுந்தரம்; பிரசுரம்: காந்திநிலையம், சென்னை 17; விலை: அணா 4.

மந்தரையென்னும் கூனியில்லாவிடில் இராமாயண காவியத்திற்கே இடமில்லையென்று சொல்லக்கூடிய அளவு முக்கியத்துவத்தை அடைந்துவிடுகிறாள் இச் சிறு நூலின் கதாநாயகி. பாலில் ஒருதுளி நஞ்சு சேர்ந்தாலும் அப்பால் முழுவதும் நஞ்சாய் மாறுவதுபோன்று, தூய நெஞ்சினளாகிய கைகேசியின் உள்ளத்திற் பகைமை விஷத்தை ஊட்டும் கூனியின் வஞ்சக தந்திரத்தைப் படம் பிடித்துக்காட்டும் கம்பசித்திரத்தை நன்கு அனுபவித்து ஆசிரியர் விளக்கியிருக்கின்றார். இதைப் படிக்கும்போது மந்தரையின் சூழ்ச்சிக் காட்சியானது, நாடக அரங்கிற் றோன்றுவதுபோல் நம் அகக்கண் முன் தோன்றுகிறது. பாத்திரங்களின் பேச்சுக்கள் கம்பரின் கவிரூபமாக ஒவ்வொரு நிமிஷமும் நம் காதில் இனிய சந்தத்தோடு ஒலிக்கின்றன. கம்பரின் காவியத்திறனோடு சேர்ந்து ஸ்ரீ திருகூடசுந்தரத்தின் வசன நடை ஓவியத் திறனும் மிளிர்கின்றது. சுருங்கக் கூறின், இது, எல்லாத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலும், தமிழார்வமுடைய ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய புத்தகமெனலாம் பாடல்களுக்குச் சிறிதளவு அரும்பதவுரை கொடுத்திருக்கலாமென்று தோன்றுகிறது.

●

**சைவ உணவு எது?** – ஆசிரியர்: பொ. திருகூடசுந்தரம்; பிரசுரம்: காந்திநிலையம், சென்னை 17; விலை: அணா 8.

இது ஒரு ஆராய்ச்சி நூலென்று ஆசிரியரே சொல்லுகிறார். மகாத்மா காந்தியடிகளின் அஹிம்ஸா தத்துவத்தில் நன்றாக ஊறி, அதன் நுட்பங்களை அறிந்தவர். இந்நூலை வாசிக்கும் சைவ போஜனக்காரர்களுக்கு, இவருடைய ஆராய்ச்சியின்முடிவுகள் வியப்பையும் திகைப்பையும் அளிக்கும். அஹிம்ஸை உணவுதான் சைவஉணவென்பது இவ்வாசிரியரின் கொள்கை. ஆனால் இப்போது சைவமென்று கருதப்படும் எல்லா உணவுகளிலும் இம்சை கலந்தேயிருக்கிறது. பால்மோர் முதலியன கலந்த தாவர உணவிலுங்கூடத்தான், உணவைப் பொறுத்தமட்டில் பிறர் உழைக்க நாமுண்ணாமல், 'உழைத்தவனுக்கே உழைப்பின் பயன்' என்னும் கொள்கையை அனுசரித்தால் அசைவ உணவும் சைவ உணவாக மாறிவிடுமென்கிறார் ஆசிரியர். அஹிம்ஸா தத்துவத்தை அறிய விரும்புவோரது சிந்தனையைத் தூண்டக்கூடிய இந்நூலில் ஆசிரியர் துணிவுடன் தன் ஆராய்ச்சியை எடுத்து வாதிக்கின்றார்.

—ஸி. எஸ். ஜி.

# கவிஞன் பரிசு

இந்த ஒற்றையங்க நாடகம், பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற கல்வித்தினக்கதம்ப விழாவின்போது நடிக்கப்பட்டது 'கலை கவிதை' என்று கனவுகாணும் இராகவனும், 'பணம் அந்தஸ்து' என்று பல்லவி பாடும் வாணியும் இந்நாடகத்தின் முக்கிய உறுப்பினர். —ப-ர்.

— சொக்கன் —

**நாடக பாத்திரங்கள்**

இராகவன்:- அந்தகக்கவி; யாழ்ப்பாடி.
வாணி:- அவன் மனைவி.
பொன்னன்:- இராகவனின்நண்பன்.
ஏலேலசிங்கன்:- இலங்கை அரசன். மற்றும் மந்திரி முதலானோர்.
களங்கள்:- தொண்டைநாடும், ஈழமும்.

**காட்சி 1.**

இராகவன் யாழ் மீட்டிப் பாடுகிறான். வாணி கோபத்துடன் வெளி வருகிறாள்

**இராகவன்:**

பாடல் (ஆக்கம்: கே. காமாட்சிசுந்தரம்)
இராகம்: குந்தலவராளி. தாளம்: ஆதி.

பல்லவி
சிந்தை மகிழ்ந்து அருள்வாய் —
ஜெயமே பெறச்
சிந்தை மகிழ்ந்து அருள்வாய்

அநுபல்லவி
பந்தம் அறுந்து இசைப்
பண்ணிடையே யான்மயங்கிக்
கந்தம் தவழும் இசைக்
காவினிலே யான்மலரச் —
(சிந்தை)

சரணம்
எந்நாட்டிலும்வளரும்
இன்பமுறு நற்கலையை
நந்நாட்டிலும்வளர்க்க
நாளும்பணி நான்புரிந்தே
தன்னாட்டியத்திறத்தில்
தன்னிகரில் லாதவனே
என்னாட்ட மீடுபெற
இன்னருளைத் தந்திடுவாய்
(சிந்தை)

**வாணி:** (வெளிவந்து) பாடுங்கள், நன்றாய்ப் பாடுங்கள். உடலில் உயிருள்ளவரை பாடித்தள்ளுங்கள். உங்களுக்கும் ஒரு குடும்பம் இருக்கின்றதே? அதிலுள்ளவர்க்கும் வாய்வயிறென்றிருக்கின்றதே! இவற்றைப்பற்றியெல்லாம் ஏன் சிந்திக்கப்போகின்றீர்கள்? நீங்கள் பாடிக்கொண்டேயிருங்கள்.

**இராகவன்:** வாணி! இதென்ன? நீயா இப்படிப் பேசுகின்றாய்?

**வாணி:** நான் பேசவில்லை: ஒட்டியுலர்ந்துபோன என்உடலும், உணர்ச்சி மரத்துப்போன என் உள்ளமும், ஊசலாடிக்கொண்டிருக்கும் என் உயிரும் பேசுகின்றன. உங்களுக்குப் பசிக்கும்போது ஒரு பாட்டு; கண்ணீர்வரும்போது ஒரு கவிதை! இது பசிபசி என்று கதறிக்கொண்டிருக்கும், இந்தப் பச்சிளங் குழந்தைக்கல்லவே? இதை ஏன் நீங்கள் யோசிக்கவில்லை.

**இரா:** வாணி: செவிக்குணவில்லாதபோது சிறிது வயிற்றுக்கு மீயப்படும். இது உனக்குத் தெரியாதா? உனக்கும் என்போன்ற கவிதையுள்ளம் வாய்த்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். பசி, பட்டினி, துன்பம், தொல்லை

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




**அன்பான மருமக்களே!**

பாலர்களுக்கான மாதிரிப் பாடசாலை ஒன்றைப் பிரதம தேசாதிபதி சோல்பெரி அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள கன்னியால்திரிமடத்திற் சென்றவாரம் திறந்துவைத்தார். இங்கிலாந்தில் 1854-ம் ஆண்டில் பாலர் பாடசாலைகள் அமைக்கப் பெற்றன. பாலர்களின் வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் இப் பாடசாலைகள் உதவி செய்கின்றன.

மருமக்களே,

வித்துவான் உமைதாணுபிள்ளை பாலர்களுக்கான நல்ல பாடல்களைப் பாடிவருகின்ருர். இவ்வாரம் அவருடைய இனிய பாடல்கள் இங்கு வெளியாகியுள்ளன. அனைவருக்கும் எனது ஆசிர்வாதம்.

## சங்கீத சபையின் சமர்த்து

**வித்துவான் எஸ். உமைதாணுபிள்ளை**

(மெட்டு — பசியால் அலைந்த நரியொன்று)

வண்ணான் வளர்த்த சிறுகழுதை
வயது முற்றிக் கிழடாக
உண்ண உணவும் ஊட்டாமல்
ஊரி லடித்து ஓட்டிடுவான். 1

கும்பிக் கொதிப்பா லக்கழுதை
குமுறிக் குமுறி அழும்வேளை
கம்பா லவனும் நைத்திடுவான்
காலா லுதைத்துத் தள்ளிடுவான். 2

நன்றி கெட்ட நாயகனை
நாளும் வெறுத்த அக்கழுதை
வென்றி நாட்டி இசையுலகில்
வித்வா னாகக் கிளம்பியது. 3

உள்ளக் குறிப்பை உலகிற்கு
ஊளை யாலே உணர்த்துகின்ற
குள்ள நாயு மவ்வழியே
குன்றி யிருக்க அதுகண்டு, 4

"சிந்தை யுளைந்து தனித்திங்கே
சிணுங்கி நிற்கும் என்நண்பா!
வந்த குறையை எனக்குரைத்தால்
வாழ வைப்பேன்" என்றதுவே. 5

அந்த மொழியை நாய்கேட்டு
"ஐயா! மூத்து இளைத்திட்டேன்
இந்த நிலையில் வேட்டைக்கு
எவ்விதம் எழுந்து சென்றிடுவேன். 6

"தின்று கொழுத்து அவர்திரியத்
தினமும் சீவனைக் கொடுத்திட்டேன்
இன்று எனக்கும் உயிரில்லை
எழுந்து நடக்க இயலவில்லை. 7

"இந்தக் காரணங் கொண்டென்னை
ஏறிட் டவரும் பார்ப்பதில்லை
வந்த வாழ்வின் விளைவீது
வாழ அறியேன்" என்றதுவே. 8

— தொடரும்

## பகலும் இரவும்

**மே.267. ந. சிவபாதம்**

நாள்தோறும் பகலும் இரவும் தோன்றி இன்பந்தருகின்றன. பகலிலேதான் இன்பம்; இரவில் இன்பம் ஏது என்கின்றனர் பலர். பலவகைப் புதினங்களைப் படிக்கலாம். பல நண்பர்களைப் பார்க்கலாம். பட்டினம் போகலாம். பல காட்சிகளைக் கண்டு களிக்கலாம். பள்ளிக்கூடத்துக்குப் போகலாம்; படிக்கலாம். இராக்காலத்தில் நாலா பக்கங்களிலிருந்தும் வரும் இரைச்சல் அப்படியே அடங்கிவிடும். அதுவும் இரவு பத்துமணிக்குப் பின் மின்சாரவிளக்குகள் ஒளிமங்கும். உடல்களைக் க உழைத்து வரும் உழைப்பாளி நிம்மதியாகத் தூங்குவான். எளியாரும் வலியாரும் உண்டு கொழுத்துத் தொந்தி பெருத்தோரும் உறங்கியிருப்பர். குடித்து விட்டுக் கண்ணுமின்னு பேசும் குடிவெறியருக்கு இரவு இன்பத்தைக் கொடுக்கின்றது. நல்ல உறக்கத்தில் நான் என்ற அகங்காரம், கோள், எரிச்சல், புகைச்சல், பொறாமை முதலியன அடங்கி ஒடுங்கியிருக்கும். இரவில் கனவுகளைக் கண்டு களி கொள்வோரும் பலர் உண்டு. அவர்களுக்கெல்லாம் இரவு இன்பத்தைக் கொடுக்கின்றது. பழைய சில மறக்கமுடியாத சம்பவங்கள் கனவில்தோன்றி ஒருவனை மேலும் மேலும் சந்தோஷத்தில் ஆழ்த்துகின்றன.

## புதிய மருமக்கள்

மே.574. மு. ஞானபாஸ்கரம் சிவாநந்தவித்தியாலயம், மட்டக்களப்பு

கீ.575. ராம. சுப்பிரமணியம் 54, மெயின் வீதி, இரத்தினபுரி.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

**11-11-51—17-11-51**

•

**மே.257 சி. சரவணபவன்;**
**கீ.412 சு. செல்லம்மா;**
**மே.443 ந. பொன்னம்மா;**
**மே.449 எஸ். ஜயாத்துரை**
**மே.499 கு. ஜெகதீஸ்வரன்;**
**மே.546 எம். உக்குவா;**
**மே.553 எல். ட. சாதிரிஸ்.**

•

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.

## எது இயற்கை?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நானடைவில் அதை நான் வெளியுலகத்திற்குக்காட்டினேன். அது உலகில் மலர்ந்து திகழ்ந்தது. பின்னர் காய்த்துப் பழுத்தது. எனது இதயத்தில் இடம்பெற்ற மலரின் உதவியுடன் நான் என்னுல் இயன்ற உதவியை உலகிற்கு வழங்கினேன்; நான் அநுபவித்த இன்பத்தை உலகத்தவருடன் பங்கிட்டு மகிழ்ந்தேன். இது— அதன் ஞாபக சின்னம்!" என்றது வாழை.

"உனது உள்ளத்தில் ஒரே ஒரு மலர்தானு மலர்ந்தது?--" என்ருன் அவன்.

"ஆம், அது ஒன்றேதான் என் வாழ்வின் இலட்சியம்: வாழ்வின் இனபம்; வாழ்வைக் கொடுக்கும் உயிர்! அந்தப் பெருமை எமக்கு இயற்கையாகவே உள்ளது!" என்றது வாழை.

தனது பெருமையை உணர்ந்த வாழை, இலைகளையும் சருகுகளையும் காற்றில் வீசிக் கலகலத்துக்கொண்டது.

அவன் மெல்ல அகன்ருன். இயற்கை எதிர்பார்ப்பதற்கு மாருக மனிதன் நடக்துகொள்வதை எண்ணி அவன் தலை குனிந்தாள்.



BP. 77-X54 TM

**ஈழகேசரி — பாலர் பகுதி**

முழுப்பெயர்: ........................................

விலாசம்: ........................................

........................................

........................................

பிறந்ததிகதி: ........................................

........................................

தந்தை தாயார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

The EeLAKESARI

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY

Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union

Founder: N. PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, Nov., 11, 1951 | No. 18

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா :

இலங்கை-இந்தியா ரூ. 6-00

மலாயா — $ 6-00

தனிப்பிரதி சதம் 10. காசு 10

## 'திறவாத படலை'

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாவென் றிரந்து திருமுன்ன
  ரேதண்ட னிட்டுநின்றால்
வாவென் றழைத்து மடிமீ
  திருத்தி வருடியணைத்து
ஆவென்று வாயைத் திறவென்றஞ்
  ஞானப் பசியடக்கிப்
போவென்று புத்தமு தீவாள்
  அருந்தமிழ்ப் பூங்கொடியே.

(அலங்காரம் பா. 10)

வா என்றழைத்து மடிமீதிருத்தி வருடி அணைத்துப் பொருள் கொடுத்தாளா? புத்தமுதுதானே கொடுத்தாள். ஏன்? புலவரும் நாமகளிடம் அதுதான் கேட்கிறார். பொருட்பஞ்சம் புகழ்ப்பஞ்சம் வந்தாலும் அவர் கவலைப்படமாட்டார். ஆனால் அவள் அருட்பஞ்சம் வரவே கூடாது. இதுதான் அவர் வேண்டுகோள்.

பொருளில்லை யேனும் புகழில்லை
  யேனும்மெய்ப் போதமருள்
தெருளில்லை யேனும் வலியில்லை
  யேனும் சிறிதுமஞ்சேன்
இருளல்லல் நீக்கி எழுமையும்
  காக்கும் இளங்கொடியே
அருளில்லை யேல்அஞ்சு வென்அஞ்
  சிடாதென்னை ஆண்டருளே.

(அலங்காரம் பா. 28)

### iii

என்னதான் 'சிறிதுமஞ்சேன்' என்று இறுமாப்பாய்க் கூறினாலும் 'பொருளிலார்க் கிவ்வுலகம் இல்' என்பது பொய்யாகுமோ? எனவே தமது முட்டினைத் தவிர்க்கும்படி முருகனைச் சரணடைகிறார். அவன் என்னதான் கொடுத்தான் என்பதைப் பார்ப்போம்.

......முருகனை அடைந்தெனது
  முட்டினை அறைந்துதவிர்
    முதல்வ வென்றேன் அங்கவன்
தந்தையோ யாசகப்
  பித்தன்என் தாய்நீவி
    சமுசார மோ இரண்டு
சங்கட மெனக்குன்னி
  லும்பெரி தனக்குநான்
    தாவசதி ஒன்று மில்லை
பந்தளை அறுக்குநற்
  பாமாலை யலதுபொற்
    பணி மாலை யில்லை.

(இலக்குமி தோத்திரம். பா. 6.)

என்று கூறுகிறான். ஆனாலும் நாம் முன் பார்த்த செல்வனைப் போலப் புலவரை மனமுடைந்து போகும்படி விட்டுவிடவில்லை. என் கைவேல் **பற்றுமேற் பற்று** என்று இருப்பதைக் கொடுக்க முன்வருகிறான். புலவரோ உது ஓர் காசு பற்றாது எனக் கழித்துச் சென்றுவிடுகிறார்.

### iv

இனியாரிடம்போவது?....?....?
கடைசியாக ஒரேஒரு இடம்தான் அவருக்குப்புலப்பட்டது.

'காரன்ன கூந்தலும்
  மதியன்ன வதனமும்
    கமலமன விழியிணைகளும்
கமுகன்ன கந்தரமும்
  வேயன்ன தோளும்இரு
    கமலமொட் டன்னதனமும்
நீரன்ன நடையும்ஒளிர்
  மின்னன்ன இடையுமுள
    நித்திய கல்யாணி.''

(இலக்குமி தோத்திரம் பா. 2)

ஆகிய இலக்குமியைச் சரணடைகிறார். தாயிடம் சேய் கேட்கும் உரிமையோடு மிகமிகப் பணிவாக அவர் கேட்கும்போது நம் நெஞ்சமே உருகிவிடுகிறது.

ஆரென்ன சொல்லியென்?
  நீமன்னு முயிர்தமக்
    கன்னையென் றேநானும் உன்
அடியனன் றேஎன்னை
  மிடியன்என் றேநின்உன்
    அகிலலோ கமும் நிறைந்த
சீரென்ன வாய்விடும்?

இப்படிக் கேட்கும்போது அன்னை மனம் கனியாளா? அருந்தமிழ்ப் பூங்கொடியிடம் புத்தமுது பெற்ற புலவர் அகில லோக நாயகியாகிய இலக்குமியிடம் தன் முட்டினைத் தவிர்த்துக்கொண்டார்.

## கவிஞன் பரிசு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யாவும் மறந்து கவிதைவானில் என்னுடன் செட்டைகட்டிப் பறப்பாயே. தேமிசைக்கும் குயிலோடு குயிலாய்க் குதலை பேசும் கிள்ளையோடு கிள்ளையாய்க் கவிதை இசைத்துப் பரவசமடைவாயே. பாவம்!

**வாணி:** என் கோபத்தைக் கிளறுகிறீர்கள். உங்கள் கண்கான் குருடென்றால் கருத்துமா குருடாகவேண்டும்? கவிதை வானில் செட்டைகட்டிப்பறப்பதாம்! இது என்ன பைத்தியகாரத்தனம்?

**இரா:** வாணி வார்த்தைப் பாணங்களை எல்லைமீறிப் பொழிகிறாய்! அதனால் என்னுள்ளத்தைக் குருதியாறாகவும் ஆக்கிவிட்டாய்.

**வாணி:** குருதி கொப்புளித்தோடட்டும். அக்கறையில்லை. அந்தகர்என்பதையும் மறந்து, அந்தஸ்து யாவையும் துறந்து உங்கள்பின், உங்கள் கவிதையின் அடிச்சுவட்டில், ஓடோடியும் வந்தேனே? எனக்கு நீங்கள் அளித்ததென்ன? தங்கள் கற்பனையில் சிக்கிய மேகமோடும் வானம் போன்ற இந்தக் கந்தைச்சீலை; பஞ்சையரும் வேண்டாத அரைவயிற்றுக் கஞ்சி; வாடையையும் சோடையையும் மகிழ்ந்து வரவேற்கும் இந்தக் குச்சில். சொல்லுங்கள். வேறு என்ன தந்தீர்கள்? (அழுகிறாள்).

**இரா:** (சோகம் கலந்த சிரிப்புடன்) என்னை என்னதான் செய்யச்சொல்கிறாய்?

**வாணி:** நீங்கள் நினைத்தால் இந்த மண் குச்சில் மாடமாளிகை யாகாதா? கேப்பங்கூழ், அறுசுவை உண்டியாகாதா? கந்தையுடன் வெறுமையாய் இருக்கும் என்னுடல் பட்டாடையாலும் பொன் அணிகளாலும் அலங்கரிக்கப்படாதா?

**இரா:** (ஏளனச்சிரிப்புடன்) நீ சொல்வது புரிகிறது. உன் சொல்லைக் கேட்டு அவனியர் முன் நான் ஆடிப்பாட வேண்டும். உடம்பைக் கோணி, உண்மையை மறைத்துக் கண்டவனை யெல்லாம் ககனம் வரை புகழ வேண்டும். மந்தியை மன்மதன் என்றும் வஞ்சனைக் கன்னனென்றும், மூடனை மதிவாணனென்றும் பாட வேண்டும்! அப்படித்தானே?

**வாணி:** பிழைக்கும் வழிகளில் இதுவும் ஒன்று.

**இரா:** (கொர்வத்துடன் நிமிர்ந்து) பிச்சையேற்று உண்ணும் வாழ்வு பெற்றுவிட இந்த இராகவன் தயாராயில்லை.

**வாணி:** (அழுதுகொண்டே) உங்களில் தப்பில்லை. உங்களை விரும்பி மணந்தேனே? அது என் தப்புத்தான்: உங்கள் கண்களுக்குக் கண்ணாய், உங்கள் இருளுலகை ஒளிபெறச் செய்ய முன்வந்தேனே? அது என் தப்புத்தான். (இராகவன் கையில் யாழைக் காண அவள் கோபம் உச்சமடைகின்றது. இராகவன் பக்கம் போய் அதைப் பறிக்க முயல்கிறாள்.)

**வாணி:** இந்த யாழ்தானே என் வாழ்விற் கொள்ளி செருகிற்று? இதன் இன்னிசைதானே என் அந்தஸ்தை, நிலையை மறக்கச் செய்தது? விடுங்கள், விடுங்கள் (பறித்தல்.)

**இரா:** (கண்ணீர் மல்க யாழை இறுகப்பற்றிய வண்ணம்) வாணி வாணி என் உயிரைப் போக்கிவிட்டு இந்த யாழை உடைத்தெறி.

**வாணி:** அப்படியானால் இந்த யாழ்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். கவிதை பாடிப் பரிசில்பெறுது இங்கு கால்வைத்தலும் கூடாது (போகிறாள்).

**இரா:** எத்தகைய பயங்கர ஆணை! நான் எங்கே போவது? (யோசிக்கிறான்). ஆம். ஈழத்து ஏலேல சிங்கனிடம் போவோம். அவன் சிறந்த கொடையாளன் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். வாணி! நான் ஈழம் போகிறேன்.

**வாணி:** (உள்ளிருந்தபடியே ஏளனத்துடன்) நாடும் யானையும் வாங்கிவரப்போகின்றீரோ? தாராளமாகப் போய் வரலாம்.

திரை

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

---

இப்போது அவரைப் பாருங்கள். சஞ்சலம் போய்விட்டது. இன்பம் தழைத்துவிட்டது. இயமனைக் கூடப்போய் வா என்று அதட்டும் தைரியம் வந்துவிட்டது. இந்த உற்சாகத்தில் அவர் கூறுவதைக் கேளுங்கள் :

சஞ்சலம்போம் இன்பம்
  தழைக்கும் தருமனையும்
அஞ்சலம்போய் வாஎன்
  றதட்டலாம்—வஞ்சகர்செய்
தந்திரம்ஓ டாதுகலை
  வாணிதமிழ் மூன்றெழுத்து
மந்திரம் ஓதி வரின்.

(இரட்டைமணிமாலை பா. 6)

கலைவாணி மந்திரம் அடங்கிய மாலைதான் நாமகள் புகழ்மாலை. ஐஞ்ஞூற்றுக்கதிகமான மணமுள்ள அழகிய மலர்களால் இம்மாலையைக் கட்டி நாமகளின் திருவடியிற் சாத்தியிருக்கிறார். யார் தெரியுமா? ஆடிப்பிறப்பொடு கத்தரித் தோட்டமும் ஆக்கி அளித்த அதே சோமசுந்தரப் புலவர்.

'தென்னிலங்கை வள'ச் செந்தமிழ் மாந்திஇறுமாந்திருந்த நமக்கு 'நாமகள் புகழ்மாலை' யாகிய திறவாத படலையைத் திறந்திருக்கிறார்கள். இறவாத புகழுடைய நூல்களின் வரிசையில் வைத்தெண்ணத்தக்க இந்நூலை ஆக்கிய புலவரை,

"சொல்லென்ற மலரிலே
  பொருளென்ற புதுமதுச்
    சொட்டிச் சுரக்கு மமிர்த
சுரபியா யொளிர்கின்ற
  சோமசுந் தரநாம
    சுகிர்தனைத் துதிசெய் வோமே''

என்று பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வணங்குகிறார். நாமும் அவருடன் கூடிப் புலவருக்குப் பல்லாண்டு பாடுவோமாக!




இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா-சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு நவம்பர் மீ 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org